# களத்தில்

களம்; 2 யூன் 1985 அன்பளிப்பு ரூபா 2-00


# யுத்த நிறுத்தம் என்பது ஆயுதப் போரைக் கைவிடுவதல்ல

**தற்காலிக போர் நிறுத்தத்தின் பயனாக எமது பிரச்சினைகளுக்கு இறுதியான சமரசத்தீர்வு ஏற்படும் என்பதில் எமக்குத் துளிகூட நம்பிக்கையில்லை. இந்தியா தனது நல்லெண்ண முயற்சிக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறித்த சில நிபந்தனைகளை முன்வைத்து பன்னிரண்டு வாரகாலத்திற்கு தற்காலிக போர் நிறுத்தத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளோம், என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்திய மத்தியஅரசின் நல்லெண்ண முயற்சிகள் காரணமாக இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டு வருவது தமிழீழமக்கள் அறிந்தொன்றே இந்திய நல்லெண்ண முயற்சியின் காரணமாக தமிழீழத்தில் ஒரு தற்காலிக போர் நிறுத்தத்திற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இந்தத் தற்காலிக போர்நிறுத்தம் பற்றி சிறிலங்கா அரசானது மிகவும் தவறான உண்மைக்குமாறான, விசமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து வருகிறது. அரசபயங்கரவாத அமைச்சரான அத்துலத்முதலி தனது வழமையான பாணியில் அபாண்டமான பொய்களைத் திரித்து, எமது விடுதலை இயக்கத்தை இழிவுபடுத்த முயற்சி செய்து வருகிறார்.

அரசியல்த்தீர்வு குறித்து எமது நிலைப்பாட்டையும் மக்களுக்கு எடுத்து விளக்குவது அவசியமெனக் கருதுகிறோம். சிறிலங்கா அரசாங்கமே போர் நிறுத்தத்தை விரும்பியது. இதற்குப்பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக விடுதலைப்புலி வீரர்களின் விடாப்பிடியான வீராவேசமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது தோல்வியின் விளிம்பில் நின்று திணறிக்கொண்டிருந்தது சிறிலங்கா இராணுவம். கட்டுப்பாடுசீர்குலைந்த ஒரு காடையர்கூட்டத்தை வைத்துக் கொண்டு கட்டுப்பாடும், ஒழுங்கும் இலட்சியவேட்கையும் கொண்ட எமது விடுதலைவீரர்களுடன்போரடி வெற்றிபெறுவது முடியாத காரியம் என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் உணரத்தொடங்கினர். இராணுவப் பாதை தோல்வியை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. என்ற உண்மையை சிங்கள மக்களும் மெல்ல மெல்ல புரியத் தொடங்கினர் இராணுவ தரப்பில் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டு வருவதை அத்துலத்முதலி எவ்வளவு காலத்திற்குதான் மூடிமறைக்க முடியும். பாரிய அளவில் பணத்தைக் கொட்டி வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளித்து, நவீனரக ஆயுதங்களை தரிதது விட்டும் கூட சிறிலங்கா கூலிப் படைகளால் புலிகளை வென்று விட முடியாது என்பதை அனுபவ ரீதியாக அரசாங்கம் உணர்ந்துகொண்டது.

இரண்டாவதாக, இந்த யுத்தத்தால் சிங்கள அரசு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. தமிழருக்கு எதிராக ஏவி விடப்பட்ட இந்த அதர்ம யுத்தம் கோடிக்கணக்கில் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை விழுங்கி, நாட்டை குட்டிச்சுவராக்கியது. யுத்த சூழ்நிலை காரணமாக வெளிநாட்டு அரசுகள் சிறிலங்காவில் முதலீடுகள் செய்யப்பயந்தனர். கடனுதவிகள் கொடுக்கத் தயங்கினர் உல்லாசப் பயணிகள் வருகையும் நின்றது. இவற்றின் விளைவாக நாட்டில்பண

[2-ம் பக்கம் பார்க்க]



அமிர்தலிங்கம்:- தமிழ் மக்களை இனி ரஜீவ் தான் காப்பாற்ற வேண்டும்.
அம்மான் சொல்கிறார்: தளபதி போ (Boor) ராடிக் களைச்சுப் போனார்போல கிடக்கு.

யுத்தத்திற்கான தயாரிப்புகள்



## யுத்த நிறுத்தத்தை எதிர்த்து தமிழீழ மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

தமிழ் பேசும் மக்கள் தமிழீழமெங்கும் ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தொடர்ச்சியாக நடாத்தி வருகிறார்கள். யுத்த நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் எதிர்த்தே தமிழீழமெங்கும் சாத்வீகப் போராட்டம் நடைபெற்று வருகின்றது முதியோரும் பெண்களும் மாணவர்களும் பல ஆயிரக் கணக்கில் கலந்துகொள்ளும் இவ் அமைதியான ஊர்வலங்கள் கூட சிறிலங்கா அரசின் விமானப் படையினரால் சுற்றி வளைக்கப்படுகின்றன. தாழப்பறந்து எம்மக்களை விரட்டும் முயற்சியில் இறங்கின ஆனால் தமிழீழ போராட்டத்திற்காக எத்தனையோ உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்த எம்மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சவில்லை. மாறாக ஊர்வலம் சுலோக அட்டைகளை இன்னும் உயர்த்தியபடி உணர்ச்சி மிக்கதாயும், ஆவேசம்மிக்கதாயும் நகர்ந்தது.

## யுத்த நிறுத்தத்தை மீறிவரும் சிறிலங்கா அரசபடைகள்

இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிகாரணமாக அதற்கு மதிப்பளித்து இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்து அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்று அமுல்படுத்தினால் மூன்று மாதகாலத்துக்கு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த நாம் சம்மதித்திருந்தோம். அத்துடன் இலங்கை அரசே முன்வந்து மூன்றுமாத காலத்துக்குள் தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வைக்கவேண்டும். அந்தத் தீர்வு எமக்கு திருப்தியளிக்காதபட்சத்தில் யுத்தநிறுத்தத்தைக் கைவிட்டுத் தாக்குதலைத் தொடருவோம் என்று கூறியிருந்தோம். தமிழீழ விடுதலைப் போராளிகள் முன் அரச படைகளின் தோல்வியை நன்குணர்ந்த சிறிலங்கா அரசு போர் நிறுத்தத்தை வலிந்து ஏற்படுத்தியது ஆனால் இன்று அவற்றை தொடர்ந்து மீறும் நடவடிக்கையில்சிறிலங்கா அரசின் காடை இராணுவம் செயற்பட்டு வருகின்றது

- 21 - 6 - 85ல் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியான் என்ற இடத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச்சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினரால் சுடப்பட்டு காயங்களுடன் தப்பிவிட்டனர்,
- 22 - 6 - 85ல் மன்னார் மாவட்டத்திலுள்ள உயிலங்குளத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி இளைஞர்கள மீது இராணுவம் சுட்டத்தில் ஒருவர் பிடிபட்டார். ஏனையோர் தப்பிவிட்டனர்: பிடிபட்டவர் உடல் எரியூட்டப்பட்டதாக 28ம் தேதி தகவல் கிடைத்துள்ளது.
- திருகோணமலையில் தமிழர்வாழும் பகுதிகளில் வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணமே உள்ளன. அகதிகளாகச் சென்ற தமிழர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பிவர முடியாது தடுக்கப்படுகின்றனர். திருகோணமலையெங்கும் தமிழர்களுக்கு எதிராக கிழக்குச் சிங்கங்கள் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
- திருகோணமலை தம்பகாமம் பகுதியில் தேடுதல் நடவடிக்கை என்றபெயரில் இராணுவத்தினர் நடத்திய குப்

## யுத்த நிறுத்தம் என்பது....

(1ம் பக்க தொடர்ச்சி)

வீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமூக, பொருளாதார சீர்கேடுகள் தலைவிரித்தாடின.

மூன்றுவதாக, விடுதலைப் போராட்டத்தை நசுக்க கையாளப்பட்ட யுத்த தந்திரோபாயங்களிலும் சிங்கள அரசு தோல்விகண்டது. இராணுவப் பயங்கரவாதத்தை மக்கள் மீது ஏவிவிட்டு, மக்களைக்கண்டபடி கொன்று குவித்து, மக்களுக்கு தாங்கொணுத்துன்பங்களை இழைத்து, பொதுமக்களிடமிருந்து போராளிகளை அந்நியப்படுத்திவிட கையாளப்பட்ட சூழ்ச்சிகள் எதுவும் பலிக்கவில்லை. எத்தனையோ துன்பங்கள் மத்தியிலும் மக்கள் மனவுறுதி தளர்ந்து போகாது விடுதலைப் புலிகளுக்கு பேராதரவு கொடுத்தனர்.

இறுதியில், அரச பயங்கரவாதத்தின் எதிர்விளைவு சிங்கள மக்களையும் தீண்டத் தொடங்கியது. இதனுல் சிங்கள பௌத்த சக்திகள் அரசாங்கம் மீது தமது ஆவேசத்தை திருப்பின எதிர்கட்சிகள் அரசாங்கத்தை ராஜீனுமா செய்யுமாறு கோஷமிட்டன.

ஒட்டுமொத்தத்தில் ஜெயவர்த்தன அரசு ஆட்டம் காணத் தொடங்கியது. இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு சிங்கள அரசு தள்ளப்பட்டதற்கு காரணம் தமிழீழப் போராளிகளின் தொடர்ச்சியான, உக்கிரமான போராட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சிங்கள அரசும் இதை நன்கு உணர்ந்து கொண்டது. இதனுல்தான் தமிழீழப் போராளிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. இந்தியா மூலம்தான் இது சாத்தியமாகும் என்பதை நன்கு அறிந்த சிங்களத் தலைவர்கள் போர் நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து தருமாறு இந்திய அரசின் காலடியில் விழுந்தனர். பயங்கரவாதிகள், அராஜகவாதிகள் தேசத்துரோகிகள் என்று எம்மை இழிமைப்படுத்திவந்த சிறிலங்கா இனவாத அரசு இறுதியில் எம்மைப் பலம் பொருந்திய அரசியல் இராணுவ சக்திகளாக அங்கீகரித்து எம்மோடு ஒரு உடன்பாடு செய்துகொள்ள முன்வந்தமை எமக்கு ஒரு அரசியல் வெற்றியாகும்.

தமிழீழ விடுதலைப் போராளிகள் மீது செல்வாக்கைப் பிரயோகித்து போர் நிறுத்த உடன்பாடு ஒன்று செய்யும் பட்சத்தில் நிரந்தரமாக அரசியல் தீர்வுகாண நடவடிக்கை எடுப்போமென சிறிலங்கா அரசு இந்தியாவிடம் மண்டியிட்டுக் கேட்டது. ஜூன் மாத ஆரம்பத்தில் டில்லியில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்திய அரசு எம்மை அணுகியது. முதலில் நாம்போர் நிறுத்தத்தை முற்று நிராகரித்தோம் சிங்களத் தலைவர்களை நம்பமுடியாது என்பதை சுட்டிக்காட்டி. பழைய வரலாற்றில் நிகழ்ந்த நம்பிக்கைத் துரோகங்களை உதாரணம்காட்டி, களைத்துப்போன இராணுவத்திற்கும், சரிந்து போன பொருளாதாரத்திற்கும் புத்துயிரூட்ட சிறிலங்கா அரசு கால அவகாசம் கேட்கிறது. என்பதையும் இந்திய அரசுக்கு புரியவைத்தோம். எமது நிலைப்பாட்டை இந்திய அரசு புரிந்துகொண்ட போதும், தனது நல்லெண்ண சமரச முயற்சிக்கு ஒத்துழைக்

போர் நிறுத்தம் சம்பந்தமாக நாம் தனித்த முடிவை எடுக்கவில்லை. எமது கூட்டணியிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சிகர அமைப்பு ஆகிய விடுதலை இயக்கங்களுடன் கலந்தாலோசித்து கூட்டாக முடிவை எடுத்தோம். போர் நிறுத்தத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட நாம், இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்தோம். இந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு போர் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதென நாம் கூட்டாக முடிவெடுத்தோம். நான்கு அமைப்புகளுமாக விதித்த நிபந்தனைகள் வருமாறு:

(1) எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்வைப் பாதிக்கும் சகல தடைகளும் நீக்கப்பட்டு தமிழீழத்தில் சகஜநிலை உருவாக்கப்பட வேண்டும்.

(2) சிறிலங்கா இராணுவப்படைகள் முகாம்களுக்கு வாபஸ்பெறப்பட்டு சகல இராணுவ கெடுபிடிகளும் நிறுத்தப்படவேண்டும்.

(3) அவசரகால, ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

(4) கடற் கண்காணிப்பு வலையம் மற்றும் தடைப்பிரதேசங்கள் நீக்கப்பெற்றுமீனவ மக்கள் கடற்தொழில் புரிய அனுமதிக்கப்படவேண்டும்.

(5) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்புக் குடியேற்றத் திட்டங்கள் கைவிடப்படவேண்டும்.

(6) கைதுசெய்து, காவலில் வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி இளைஞர்கள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும்.

இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் 12 வாரங்களுக்குள் நாம் யுத்தநிறுத்தம் மேற்கொள்வதென முடிவுசெய்திருக்கிறேம். இந்தப் 12 வாரங்களுக்குள் சிறீலங்கா அரசு நிரந்தரத் தீர்வுக்கான உருப்படியான திட்டம் ஒன்றை எமது பரிசீலனைக்கு முன்வைக்கவேண்டும் அரசியல் தீர்வுக்கான இத்திட்டம் எமக்கு திருப்தியளிக்காது போனுல் நாம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை அத்துடன் போர் நிறுத்தத்தைக் கைவிட்டு போராட்டத்தில் குதித்துவிடுவோம். ஆகவே, இலங்கை அரசு எவ்விதமான சமரசத்திட்டத்தை முன்வைக்கிறது என்பதில்தான் எல்லாமே தங்கியிருக்கிறது.

இந்த தற்காலிக போர் நிறுத்த நடவடிக்கையின் பயனுக எமது பிரச்சினைக்கு ஒரு இறுதியான சமரஸத் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிறீலங்கா அரசுக்கு அப்படி மனமாற்றம் ஏற்பட அறிகுறி எதுவுமில்லை தமிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப் புரட்சிப்போராளிகளை அடிபணியச் செய்யவேண்டும் என்பதே அவர்களது அந்தரங்கத் திட்டம். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்துபோன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறேம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த சூத்திரத்தாரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பது உறுதியானதும் திட்டவட்ட

முதலாவதாக இந்திய அரசு எதிர்பார்ப்பதுபோல சமஸ்டி அமைப்பு ஒன்றை உருவாக்கி வட., கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சட்டசபை ஆட்சியை கொடுக்க சிறிலங்கா அரசு தயாராக இல்லை.

இரண்டாவதாக, அப்படியொரு பிரதேச சுயாட்சித் திட்டத்தை பௌத்த-சிங்கள இனவாத சக்திகள் எதிர்த்தே தீரும். சமஸ்டியாட்சி தனியரசுக்கு ஒத்தது என்பதே பெரும்பான்மைச் சிங்களவரது கருத்தாகும். வடக்கையும் கிழக்கையும் இணைத்த தமிழ்ப் பிரதேச ஐக்கிய அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதை சிங்கள இனவெறியர்கள் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. ஆகவே மீண்டும் மாவட்ட சபையென்றும் அதிலிருந்து மாகாண சபை என்றும் புளித்துப்போன திட்டங்களே முன்வைக்கப்படும். இந்தக் குறைந்தபட்சத் திட்டங்கள் எதையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

எமது அரசியல் விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறேம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறேம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களை உயிர்ப் பலி கொடுத்திருக்கிறேம். எமது வீடுகள், சொத்துக்கள் செல்வங்களை இழந்திருக்கிறேம். எண்ணற்ற இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக்கிறேம் பொறுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு நாம் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறேம். இழிமைப்படுத்தப்பட்டிருக்கிறேம் சிங்களப் பயங்கரவாதமானது. எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப்பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீர மகா சாதனைகளுக்குப் பின்னர், நாம் சிறிலங்கா அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கை நீட்டப்போவதில்லை. நாம் ஆயுதங்களை கைவிட்டு மன்னிப்புக் கோரப் போவதில்லை எமது மக்களின் சுதந்திரத்தையும்,கௌரவத்தையும்நிலைநாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்திஞேம் அந்த சுதந்திமும் கௌரவமும்' நிலைநாட்டப்படாதவரை நாம் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை.

நாம் சுதந்திரமாக. கௌரவமாக, நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திரத் தமிழீழத்தில் தான் சாத்தியமாகும். அந்த சுதந்திரத் தமிழீழம் கிட்டும் வரை எமது போராட்டம் தொடரும் என்பது தெட்டத் தெளிவானது.

ஆகவே இந்த யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சுக்கள் சமரசத் திட்டங்கள் என்ற மாயைகளில் மயங்கிவிடவேண்டாமென எம் மக்களை கேட்டுக்கொள்கிறேம். இந்திய அரசின்நல்லெண்ண முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைக்கும் அதேவேளை எமது இலட்சியத்திலிருந்து நாம் ஒருபோதும் வழிதவறப்போவதில்லை என்பதையும் நாம் திட்டவட்டமாக எடுத்துக்கூற விரும்புகிறேம். சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு ஒரு நேர்மையான, நீதியான, கௌரவமான தீர்வை வழங்கப்போவதில்லை. என்பதை இந்திய அரசு உணர்ந்துகொள்ளும் போது எமது இலட்சியத்திற்கு மதிப்பளித்து, எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும்

## திரு ஆலாலசுந்தரத்தின் கஷ்ட நிலை

வீட்டுக்கு ஒரு பவுண் கேட்ட விடுதலைப்புலிகளிற்கு மக்கள் அமோக ஆதரவளித்தமை யாவரும் அறிந்ததே கடந்த காலங்களில் தமிழ் மக்களிற்காக உழைத்த கோப்பாய்த் தொகுதி தமிழ் மக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய திரு. ஆலாலசுந்தரம் அவர்களிடமும் பவுண் கேட்டுச் சென்றனர் விடுதலைப்புலிகள்.

வெளியில் வந்த திரு. ஆலாலசுந்தரம் தமது கஷ்டங்களை எடுத்துரைத்தார். தனது சீவியத்திற்காக வருமானமாக நம்பியிருந்த பாராளுமன்றப்பதவி பறிக்கப்பட்டதால் தாம் மிகவும் கஷ்டப்படுவதாகக் கூறினுர். இந்த நேரத்தில் அவரது வீட்டினுள் வீடியோ படம் அவரது சொந்த டெக்கில் ஓடிக்கொண்டிருந்தது. மனைவி சுவாரசியமாக இரசித்துக் கொண்டிருந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னிடம் பவுண் என்ற சாமானே கிடையாது என்ருர். தாம் சாப்பாட்டுக்கே கஷ்டப்படுவதாகக் கூறினுர். கல்வியங்காட்டிலுள்ள அரிசிமில்லின் உரிமையாளர்கள் நால்வரில் திரு. ஆலாலசுந்தரமும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மில் அமைந்துள்ள நிலமும் இவருக்கே சொந்தமானது.

தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பிற்காக உங்களிடமுள்ள பெரும் தொகையான சொத்துகளில் ஒரு மிக மிகச் சிறு பெறுமதியான ஒரு பவுணுவது தருமாறு கேட்கப்பட்டது. கால் பவுண் கூட தராதநிலையில் விடுதலைப் புலிகள் திரும்பினர்.

## மினி திரை அரங்குகளுக்கு ஒரு வேண்டுகோள்

சீனுவில் அடக்குமுறையாளருக்கெதிராக விடுதலைப் போராட்டங்கள் நடந்த வேளையில் பிரிட்டிஸார் அங்கு போதைவஸ்துகளைப் பெருமளவில் கொண்டு சென்று விநியோகித்தனர். இது எதைக் குறிக்கின்றது? போராட்டங்களைத் திசை திருப்பி மக்களை மயக்க நிலையில் வைத்திருக்க வேண்டுமாயின் போதை வஸ்துகள், பாலியல் வக்கிரங்களைச் சித்தரிக்கும் படங்கள் உளுத்துப் போன மேலை நாட்டுக் கலாசார சீரழிவுகள் போன்றவற்றில் மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதும் அவை இலகுவாகக் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்வதும் ஒரு கைதேர்ந்த யுக்தியாகும். இந்த அடிப்படையிலேயே மூலைக்கு மூலை மினி வீடியோ அரங்குகள் என்று கூறப்படும் திரை அரங்குகளில் காட்டப்படும் நீலத் திரைப்படங்களையும் நோக்க வேண்டியுள்ளது. இவ்வாருன பல திரையரங்குகளில் காண்பிக்கப்படும். நீலத் திரைப்படங்களைப் பற்றிய புகார்கள் மக்களிடமிருந்து பெருமளவில் எமக்கு கிடைத்த வருகின்றது.

பிரபல்யமான பாடசாலைகளைச் சூழவுள்ள பல திரையரங்குகளில் இவ்வாருன படங்கள் காண்பிக்கப்படுவதால் பாடசாலை மாணவர்களைச் சுண்டியிழுத்து அவர்களது கல்வியையும்பாதிக்கின்றது. பகல்நேரக் காட்சிகளும் காண்பிக்கப்படுவது மாணவர்கள் பாடசாலை நேரத்தில் படிப்பைக் கைவிட்டுச் செல்லுமளவிற்கு நிலைமையைக் கெடுத்துள்ளது.

மக்களிடையே இருக்கும் மாயையை நீக்கிஅவர்களுக்கு போராட்ட உணர்வை ஊட்ட வேண்டிய அவசியம் எமக்கு இன்று நிறையவுள்ளது. இந்த வேளையில் போராட்ட உணர்வை ஊட்ட முற்படாவிட்டாலும் பரவாயில்லை. எமது மக்களிடையே மயக்கத்தை ஊட்டும் இத் திரைப்படங்களை போடாது நிறுத்த வேண்டும். இவ்வாருன படங்கள் சமுதாயத்தில் பயங்கரமான சமூக, கலாச்சாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி விடும். விடுதலை ஆக்கபூர்வமான சமுதாயத்தை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்லக் கூடிய திரைப்படங்கள் திரையிடுமாறு சம்பந்தப்பட்டவர்களை மிக அன்பாக தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேம்.

## யுத்த நிறுத்தத்தை மீறி.....

(1ம் பக்க தொடர்ச்சி)

* மன்னுர்ப் பகுதியில் கொககுடையார் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன்னர் காட்டில் வைத்து 4 இளைஞர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.
* எமது இயக்க உறுப்பினர்கள் இருவர் கிளிநொச்சி கந்தசாமி கோவிலின் முன்வைத்து கொமாண்டோ பொலிசாரினுல் சுடப்பட்டனர். இருவரும் வாகனங்களை விட்டு விட்டுத் தப்பிவிட்டனர்.

7-7-85 அடம்பனில் பலஇளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

9-7-85 முல்லைத்தீவில் நடைபெற்ற போர்நிறுத்த எதிர்ப்பு ஹர்த்தாலின்போது கடையடைப்பு செய்த கடைக்காரர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

10-7-85 அக்கரைப்பற்று உப அரசாங்க அதிபர் அலுவலகம் படை முகமாக மாற்றப்பட்டுள்ளது.

அம்பாறை, அக்கரைப்பற்று பகுதிகளில் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கபட்டது.

12-7-85 வவுனியா, நெடுங்கேணி-பெரிய குளம் ஒதியமலை,ஒலுமடு பகுதிகளில் ஆயுதம் தாங்கிய அரச கூலிப்பட்டாளங்களின் அட்டகாசங்கள். பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

* கடல் கண்காணிப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
* புத்தளத்தில் லொறி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து. தமிழ்த் தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்ருே ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்

எமது கையில் ஆயுதமும் ஆன்ம பலமும் இருக்கிறது. முழு மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமாஞல் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த

## தொடர்ந்துவரும் அடக்குமுறையின் கோரங்களையும் கொடுமைகளையும் நம் தமிழீழ மழலைகள் தொடர்ந்தும் அனுபவிக்காமலிருக்க

## நீ எம் மக்களுக்கு செய்த அழிவுவேலைகளும்நாசவேலைகளும் எம்மனதில் அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன



நிரந்தர விடிவிற்காய்



# நாம் போராடுகிறோம்

தமிழ் பேசும் மக்களின் கடந்த கால வரலாற்றில் காலம்காலமாக அனுபவித்து வந்த துன்பங்களும்துயரங்களும்கணக்கிலடங்காதவை பதவிக்குவந்த அத்தனை சிறிலங்கா அரசும் இனவாதத்தைக் கட்டி வளர்த்து அதனூடாகவே தமது பதவியைக் கட்டிக் காத்து வந்துள்ளன. இனவெறி பிடித்த சிறிலங்கா அரசு எம்மக்களுக்குச் செய்து வரும் கோரங்களும் கொடுமைகளும் முற்றாக முற்றுப்பெற நிரந்தர விடிவிற்காகவே நாம் போராடுகின்றோம்.



தொடரும் அடக்குமுறைகள்!
காலம் காலமாக...........
பேச்சுவார்த்தைகள்!
உடன்படிக்கைகள்!
எழுதிய மை காய முன்பே கிழித்தெறியப்பட்ட
—உடன்படிக்கைகள்!
தொடர்ந்து தொடரும் அடக்கு முறைகள்!
இவற்றிற்கெல்லாம்நிரந்தரவிடிவு-இறுதி லட்சியமடைய நாம் எம்மை தியாகவேள்வியில் அர்ப்பணித்துப் போராடி வருகின்றோம்.

## தொடர்ந்து வரும் அடக்குமுறையின் கோரங்கள் கொடுமைகள்

யூன் மாத முற்பகுதியில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கல்லடி, வாழைத்தோட்டம், மல்லிகைத்தீவு, ஈச்சியம்பத்தை, வெருகல் முகத்துவாரம், சங்குவேலி, 3 ஆம் கொலனி, 58 மீன்காமம், பட்டித்திடல் மணல்சேனை, ஆலிம்சேனை, கிளிவெட்டி, கல்காமுனை என்பன உட்பட பல கிராமங்கள் அரசபயங்கரவாதிகளாகிய ஆயுதப்படை, ஊர்காவல் படைக் குண்டர்களால் தீவைத்துச் சூறையாடப்பட்டது. இவ் வெறியாட்டத்தின் போது கிளிவெட் டியிலிருந்து மாத்திரம் பெண்களுட்பட சுமார் 55 பேர் மிலேச்சத்தனமான இவ் அரசபயங்கரவாதிகளால் பிடித்துச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தில் இறக்கப்பட்டு கதறக் கதற சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் வேறு பல கிராமங்களிலும் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

இதை தொடர்ந்து தமது உயிருக்கும் பாதுகாப்பு வேண்டி உடைமைகளைக் கைவிட்டு குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களுட்பட பல தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுந்தனர், இதைக்கூட சிங்களப் பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை ஆலி ஒழுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் தமது துணைக்கு ஊர்காவல் (!) படையைச் சேர்ந்தவர்களையும் ஏனைய சிங்களக் காடையர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களையும்கூட்டிக் கொண்டு தமிழ் அகதி முகாம்களுக்குச் சென்றனர்.

அங்கிருந்த தமிழர்களை வெருட்டி இம்சித்து விட்டு கதிகலங்கிப் போயிருந்த பெண்களில் 50 பேரைத்

இக் காமுகர்களின் வெறியாட்டத்தைக் கேள்விப்பட்ட விடுதலைப்புலிகள் அணியொன்று உடனடியாக எமது சகோதரிகளை மீட்க தெஹிவத்தைக்கு அனுப்பப்பட்டது எமது அணி அங்கு வருவதைக் கேள்விப்பட்ட பல சிங்களக் காடையர்கள் தப்பி ஓடிவிட்டனர். நாம் அங்கு சென்றடைந்தபோது அவர்கள் கொண்டு சென்ற தமிழ்ப் பெண்களில் இருவர் நிர்வாணமாக்கப்பட்டிருந்தனர் ஏனையோரையும் சுட்டுக்கொல்ல முயல்கையில் எமது அணி [redacted] தமிழ்ச் சகோதரிகளை மீட்டு, உடை கொடுத்து அழைத்து வந்தோம்.

இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதற்கென்றே அரசபயங்கரவாதிலலித்தினால் ஊர்காவல் (!) என்ற பெயரில் ஆயுதபாணிகளாக்கப்பட்டிருந்த அக் காடையர்களிடமிருந்த நான்கு 'சொட்கன்' (Shotgun) துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. எமது மீட்பு நடவடிக்கையின்போது ஒரு காடையன் 'சொட்கன்' சகிதம் உயிருடன் பிடிக்கப்பட்டான்.

இதற்கு மறுதினம் (12-6-85) தெஹிவத்தைகிராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவ கவச வாகனமென்று 9-10 மணிக்கு எம்மால் கண்ணி வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. இராணுவத்தினரில் எண்மரும் ஒரு பொலிசாரும் இதில் இறந்தனர் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

போராளிகளுடன் மோத

களைத் தாக்கும் வேலையை மறுதினம் (13-6-85) தொடங்கினர். சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான் போன்ற கிராமங்களில் முன்பு எரிக்காது மிஞ்சியிருந்த பகுதிகள் அரச பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்டது. இவ் எரிப்பு நடவடிக்கைகளுக்கு துப்பாக்கியில் ஒருவித பௌடர் நிரப்பப்பட்டு பாவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் கடனித்தீவு கிராமத்தை அழிக்க வந்தனர். அங்கு எமது மூர்க்கமான தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்க முடியாத அவர்கள் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டனர். இவர்கள் பின்னர் சம்பூர் பகுதியிலுள்ள அகதிமுகாம்களுக்குச் சென்று அங்கு ஏதிலிகளாக வந்து சேர்ந்த தமிழ்மக்களுக்குக் கொடுப்பதற்கென வைத்திருந்த உணவுப் பொருட்களுக்கு நஞ்சு மருந்து அடித்து தமது ஆற்றாமையை அப்பாவி மக்களிடம் காட்டிவிட்டுச் சென்றனர். இப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் விடுதலைப்புலிகளின் புரட்சிகர மக்கள் இராணுவம் சகல மக்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் தமது அணியைப் பலப்படுத்தி விரிவுபடுத்தி வருகின்றனர். மக்களின் மனப்பூர்வமான ஆதரவோடும் பங்களிப்போடும் வளர்ச்சியடைந்து வரும் நாம் எதிரியை தமிழீழத்தின் சகல

## எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல

### எம் மக்கள் பாதுகாப்பாகவும் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கானதே

பத்து வருடங்களுக்கு மேலாக படிப்படியாக வளர்க்கப்பட்ட எமது போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக பரிணமித்து வருகின்றது. எமது போராட்ட வேகம் தியாகத்தின் முன் சிறிலங்கா அரசு "தாக்குதல்களை நிறுத்துங்கள்" என யுத்த நிறுத்தம் கோரி மண்டியிட்டு நிற்கின்றது. கடந்த இரு மாதங்களில் 3 பெரிய பொலிஸ் நிலையங்கள் முற்றாக தகர்க்கப்பட்டன. இராணுவம் வீதிகள் வலம் வர முடியாதவாறு கண்ணி வெடித்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. முகாம்களிலே இராணுவம் முடங்கி கிடக்கின்றது.

நடைபெற்ற பொலிஸ் நிலைய தாக்குதல்களில் 3 சிங்கள பொலிசார் உயிருடன் சரணடைந்தனர். பலரை கைது செய்து ஆயுதங்களை பறித்து உடன் விடுதலை செய்தோம்.

சரணடைந்த 3 பொலிசாரையும் அன்பாக பராமரித்து அவர்களுக்கு எமது நிலைப்பாடு சம்பந்தமாக பூரண அரசியல் விளக்கமளித்து விடுதலை செய்தோம்.

சிறிலங்கா இனவெறி அரசும் அதன் ஊது குழல்களான தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி சேவைகள் சிங்கள மக்களிடமிருந்து திட்டமிட்டு இவற்றை மறைத்து வருகின்றன. நாம் மனிதநேயத்துடனே போராடுகிறோம் என்பதை எம் மக்கள் நன்கறிவர். எம் மக்கள் மீதும் போராளிகள் மீதும் எம் எதிரியால் கட்டவிழ்த்து விடப்படும் கொடூரங்கள் எமது உணர்வுகளை கடுமையாக பாதிக்கின்றன. ஆயினும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது மனிதாபிமான உணர்வுகளை கைவிடாமல் எமது போராட்டத்தை நெறிப்படுத்தி முன்னெடுக்கிறோம்

நாம் யுத்தத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்களல்லர், இரத்தம் தோய்ந்த இம் மண்ணும் எம் மக்கள் மீது திணிக்கப்பட்ட கோரங்களும் கொடுமைகளுமே எம்மை போராட்டத்திற்குள் கொண்டு வந்தன. இவற்றிலிருந்து எம் மக்களை பாதுகாக்கவே நாம் ஆயுதம் ஏந்தினோம். நாம் துப்பாக்கி ஏந்தியது யாரையும் அழிக்கவல்ல

"ஆயுதத்தை தன்வசப் படுத்தாமலும் அதைப் பயன்படுத்தப் பழகாமலும் இருப்பது, ஓர் அடக்கப்பட்ட இனத்தை அடிமை வாழ்வுவாழவே தகுதியாக்கும்"

- லெனின்

# ஸ்ரீலங்கா அரசின் கபட நாடகத்தில்....

தமிழ் பேசும் மக்களை இந்நாட்டின் ஒரு சாதாரண பிரஜைகளாகக் கூட மதிக்காத ஜயவர்த்தன இங்கு இனப் பிரச்சினையே இல்லை என பாகிஸ்த் தானில் வைத்து உலகுக்கு அறிவித்திருந்தார். "தமிழ் பேசும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை" என பகிரங்கமாகவே அறிவித்த ஜயவர்த்தன திடீரென இப்போது யுத்த நிறுத்தம் தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்த்தல், வடக்குக்கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி என்பன பற்றியெல்லாம் பேசும் போது இவற்றின் பின்னால் ஏதோ இருப்பது தெளிவாகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என அறிவித்த ஜயவர்த்தன இன்று தமிழீழ விடுதலைப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருக்கிறார் என்றால் அதன் பின்னணியை ஆராய்வது அவசியமாகும்

மிக உக்கிரமான நிலையை அடைந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம் பலமுனைகளிலும் சிறீலங்கா அரசிற்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இராணுவப் பொருளாதார உள்நாட்டு அரசியல் சர்வதேச நிலைமைகளில் மிகவும் இக்கட்டான கட்டத்தினுள் சிறீலங்கா அரசு சிக்கியுள்ளது,

தமிழீழத்திலும் தமிழீழத்திற்கு வெளியே சிறீலங்காவிலும் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதல்கள் அரசை ஆட்டங்காண வைத்துள்ளது. ஒரு மாதத்திற்கு ஒன்று என்ற ரீதியில் தமிழீழத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றி வந்தமை அரச படைகளின் இயலாமையை நன்றாகவே வெளிப்படுத்தியுள்ளது. பொலிஸ்நிலையம் தாக்கப்படப்போகிறது என்பதை அறிந்தவுடனேயே ஓட்டம் பிடித்த கொமாண்டோக்களின் வீரத்தை லலித் புரிந்து கொண்டுள்ளார் சித்திரை வைகாசி மாதங்களில் இராணுவ ரோந்துகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேற முடியாத நிலைமையைத் தோற்றுவித்தது ஆரம்பகாலங்களில் போராளிகளுடன் நேர்நின்று மோதப் பயந்து தோற்றோடும் இராணுவத்தினர் பின்னர் பெரும் தொகையாக கவசவாகனங்களில்வந்து நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். ஆனால் இன்று போராட்டம் வளர்ச்சியடைந்த நிலையில் தாக்குதல்களின் பின்னரும் போராளிகள் நவீன ஆயுதங்களுடன் அந்தந்தப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டபோது இராணுவத்தினர் முகாம்களினுள்ளேயே ஒழிந்து கொண்டனர். அண்மையில் யாழ் பொலிஸ்நிலையம் தகர்க்கப்பட்ட மறுநாள் முழுவதும் யாழ்ப்பாண நகரம் விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டினுள் இருந்தது குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு தமிழீழப் போராளிகளிடம் படுதோல்...

மறுத்தனர். "தற்போது நாட்டில் வன்முறைகள் இடம்பெறாது அமைதி நிலவுவது ஆறுதலைத் தருகிறது. இவ் ஆறுதல் எமது படைவீரர்களின் நடவடிக்கைகளினால் அல்ல. பக்தர்களின் வேண்டுகோளின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது" என்ற பிரேமதாசாவின் கூற்று (வீரகேசரி 22-6-85) சிறிலங்கா இராணுவத்தின் உண்மைநிலையை தெளிவாகவே விளக்குகிறது. யுத்த நிறுத்தத்தின் பின்னர் இராணுவம் முகாம்களிற்கு அனுப்பப்படவில்லை. முகாம்களிலிருந்து வெளியில்வர இராணுவம் மறுத்தபின்னரே யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டது. சிறீலங்காவின் பொருளாதார நிலைமைகள் வரலாறுகாணாத நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. நாளொன்றிற்கு சிறீலங்காவின் யுத்தச்செலவு ஒருகோடி அறுபதுலட்சம் ரூபா ஆகும் 1985ம் ஆண்டிற்கான பட்ஜட் இல் 410 கோடி ரூபா பற்றாக்குறை இருந்தது இதுவரையான செலவுகளினால் இன்னும் 400 கோடிரூபா மேலதிகப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மொத்தமாக இதுவரைக்கும் இவ்வாண்டிற்கான பட்ஜட் பற்றாக்குறையான 810 கோடி ரூபாவை நிவர்த்தி செய்யவழி இன்றி அரசு தவிக்கிறது. 1976ம் ஆண்டு பட்ஜட்டில் சிறிலங்காவின் பாதுகாப்பு செலவினம் 33 கோடி ரூபாவாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் சிறிலங்காவிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத்தரும் முக்கியதுறைகள் பெரும் வீழ்ச்சிகண்டுள்ளன அந்நிய செலாவணியில் 60% ஐப் பெற்றுத்தந்து முதலாமிடத்தை வகிக்கும் தேயிலையின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் இதுவரை 200 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. மலையகத் தோட்டங்களில் அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தங்கள் தேயிலை உற்பத்தியை பெரிதும் பாதித்துள்ளது. சிறீலங்காவின் ஏனைய முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான றப்பர், தென்னை போன்றவற்றிற்கும் சர்வதேச சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அந்நியச் செலவணியைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கியபங்கு வகிக்கும் இன்னோர் துறையான உல்லாசப் பயணத்துறை சீரழிந்து போயுள்ளது சிறீலங்காவிற்கு உல்லாசப் பயணிகள் பெருமளவில்வரும் காலமாகிய தை தொடக்கம் ஆனி மாதம்வரை 1984ம் ஆண்டில் 30% உம் 1985ம் ஆண்டில் மேலும் 20%ம் உல்லாசப்பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது,

வெளிநாட்டு உதவிகளிலேயே பெரிதும் தங்கியுள்ள சிறீ லங்கா, அபிவிருத்தி நோக்கங்களிற்கென வெளிநாடுகளிலிருந்து பெற்ற உதவிகளை யுத்தத்திற்காக செலவிட்டுவந்துள்ளது. இதன்காரணமாக சிறீலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகள் பல தமது உதவிகளை நிறுத்திக்கொண்டமை அல்லது கட்டுப்படுத்தியமை அரசிற்கு பெரும் பொருளாதார நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

கடியை எதிர்நோக்குகிறது நாட்டின் அபிவிருத்தி பாழடைந்து செல்வதையும் அப்பாவி உயிர்கள் வீணாகப் பலியிடப்படுவதையும் சிங்கள மக்கள் உணர ஆரம்பித்து விட்டனர். அரசாங்கத்தின் பொய்ப் பிரச்சாரங்களை விளங்கிக் கொண்டுள்ளனர். விழிப்படைந்த சிங்கள மக்களின் அரசிற்கு எதிராக எழுச்சியடைகின்றனர்.

சிறிலங்கா அரசியல் தலைவர்களைத் தீர்மானிப்பதில் முக்கிய பாத்திரம் வகிக்கும் பௌத்தபிக்குமார் ஆயிரக்கணக்கில் அரசிற்கெதிராக சத்தியாக்கிரகங்களும் உண்ணா விரதங்களும் இருந்து வருகின்றனர். அஸ்கிரியமகா நாயக்கதேரோ தனது தலைமையில் "பாதுகாப்புக்கவுன்சில்" ஒன்று அமைக்க பிரேரித்துள்ளார்.

முக்கிய எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசினை பதவிவிலகும் படியும் பொதுத்தேர்தலை நடத்தும் படியும் நெருக்குகிறது.

சர்வதேச அரங்கில் சிறீலங்காவின் முகமூடி கிழிக்கப்பட்டு இனவாத சுயரூபம் வெளிக்காட்டப் பட்டுள்ளது. சர்வேதச சமூகத்தால் ஒதுக்கப்பட்ட உலகின் இரண்டு இனவெறி நாடுகளான இஸ்ரேலுடனும், தென்னாபிரிக்காவுடனும் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் சிறீலங்காவின் சர்வதேச உறவுகளை பாதிப்படையயச் செய்துள்ளது முஸ்லீம்களின் பயங்கர எதிரியான இஸ்ரேலுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தொடர்புகளினால் பெருமளவான இலங்கையரிற்கு வேலைவாய்ப்பை வழங்கும் அரபுநாடுகள் இலங்கையைக் கண்டித்துள்ளன.

சிறீலங்கா அரசு அமெரிக்கா, பாகிஸ்த்தான், சீனா என்பவற்றுடன் கொண்டுள்ள நெருக்கம் இந்தியாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தெற்காசியாவின் பிராந்திய வல்லரசாக இந்தியா திகழ்வதால் இந்தியாவை எதிர்த்துக்கொண்டு சிறீலங்கா நிலைத்திருக்க முடியாத நிலைமை நிலவுகிறது.

இவ்வாறாக தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டம் பலமுனைகளிலும் கொடுத்த நெருக்குதல்களே இன்றைய யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு காரணமாகும். இன்றைய இந்த நிலை எமது போராட்டத்தினது வளர்ச்சியின் ஒருகட்டத்தையே காட்டுகிறது. இது போராட்டத்தின் முடிவல்ல சிறிலங்கா அரசு எம்மீது பிரயோகித்து வரும் அடககுமுறையின் முடிவின் ஆரம்பமாகும்.

சிறிலங்கா அரசு தானாக தமிழ் பேசும் மக்களின் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கப் போவதில்லை. இத்தகைய நெருக்கடிகளினால் அரசு முன்வைக்கும் தீர்வுகள் எமது பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை.

எமது போராட்டம் ஒரு புனிதமான இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டது. இன்று நாம் கண்டுள்ள இந்த வேகமான வளர்ச்சி எம்மை மேன்மேலும் நம்பிக்கை கொள்ளச்செய்கிறது.

இடைக்காலத்திலேற்படுகின்ற சிறிய தளர்வுகளில் மயங்காது எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். இறுதி இலட்சி...



# மக்களோடு புலிகள்

பல்வேறு படிநிலைகளினூடு வளர்த்தெடுக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டம் இன்று மக்களின் பூரண பங்களிப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

சிறிலங்கா அரசுக்கெதிரான வெற்றிகரமான தாக்குதல்கள் தமிழீழத்தின் எல்லைகளுக்கப்பால் - சிறிலங்கா வரை பரந்தும் இராணுவ முகாம்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுமுள்ளன. இந்த வகையில் தீவிரவளர்ச்சி கண்ட எமது போராட்டம் திடீரென வளர்ந்ததல்ல.

ஒரே ஒரு கைத்துப்பாக்கியுடன் 9 இளைஞர்கள் தொடங்கிய போராட்டமே இன்று மக்கள் போராட்டமாக பரிணமித்து வருகிறது. இது ஆரம்பத்தில் துரோகியை ஒழித்தல் ஒரு பொலிசை சுட்டு ஆயுதத்தைக் கைப்பற்றல் என்ற நிலையிலிருந்ததே வளர்ந்து வந்தது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களோடு பெற்ற அனுபவங்கள் வளர்ச்சிகள் ஒரு பொலிஸ் ஜீப்பை தாக்குமளவிற்கு வளர்ந்து அதிலிருந்து வளர்ச்சிக்கட்டமாக பொலிஸ் நிலைய தாக்குதல் நிலையை அடைந்தது.

இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள் ஆரம்பத்தில் இரு ராணுவ வீரர் → இராணுவ வாகனம் → இராணுவத் தொடர் வண்டிகள் → இராணுவ முகாம் என்ற நிலையை படிப்படியான காலகட்டங்களினூடாக அடைந்து வந்துள்ளது படிப்படியான நிலைகளில் இயக்க வளர்ச்சிகள் ஆயுதக் கொள்வனவு, சர்வதேச உதவிகள் என்பவற்றை கெரில்லாப் போராட்டம் வளர்த்தே வந்திருக்கின்றது.




இன்று விடுதலைப் போராட்டம் ஓர் புதிய பரிமாணத்தை எடுத்து வருகின்றது. ஓர் தாக்குதலை தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்களுடனேயே இருந்து பூரண பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு எம் மக்களையும், சொத்துக்களையும் இராணுவ வெறியாட்டத்திலிருந்து பெருமளவு பாதுகாத்து வருகின்றனர்.

மக்களும் விடுதலைப் புலிகளோடு ஐக்கியமாகி தம்மைத் தாமே பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அனைவருமே இப் புரட்சிகர யுத்தத்தில் தம்மாலியன்ற முழுப் பங்களிப்பையும் செலுத்தி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் உண்மையாகி தமிழீழம் மலர்ந்து கொண்டிருக்கிறது.



## தமிழீழ விடுதலைப் பாதையில்...

# விடுதலைப் புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்கின்றன...

### குச்சவெளி பொலிஸ் நிலையத்தகர்ப்பும் கடற்படை முகாம் தாக்குதலும்



தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலைப் பிராந்திய தாக்குதற் பிரிவினர் வெற்றிகரமாக மேற்கொண்ட தாக்குதலினால் குச்சவெளிபொலிஸ் நிலையம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. இரவு 9 மணியளவில் ஐம்பதுபேர் கொண்ட விடுதலைப் புலிகளின் படைப் பிரிவு ஒன்று குச்சவெளிப் பொலிஸ் நிலையம் மீது அதிரடித் தாக்குதலைத் தொடுத்தது காவலுக்கு நின்ற கொமாண்டோக்கள் (இவர்கள் இஸ்ரேலிய மொசாட், பிரித்தானிய எஸ். ஏ. எஸ் போன்ற சர்வதேச நிபுணர்களினால் விசேடமாகப் பயிற்சியளிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) தாம் வைத்திருந்த துப்பாக்கி



களையும் போட்டுவிட்டு ஓடித் தப்பிவிட்டனர்.(அன்றுகாவல்! கடமையிலிருந்த பதின்மூன்று கொமாண்டோக்களிற்கு எதிராக அரச விசாரணை நடைபெறுகிறது.)
பல கொமாண்டோக்களும் பொலிசாரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு அரைமணி நேரத்தினுள் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது அங்கிருந்த சகல ஆயுதங்களும் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. பின்னர் பொலிஸ்நிலைய கட்டிடங்களான மூன்று பெரும் கட்டிடங்களும் வெடிகுண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டன. பொலிஸ் நிலைய வாகனங்கள் யாவும் சேதப்படுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் ஆரம்பமான அதே நேரத்தில் அருகிலுள்ள கடற்படை முகாமும் தாக்கப்பட்டது. மூன்றுமணி நேரமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதலில் ரொக்கற்லோஞ்சர் போன்ற நவீன ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டது. ஓர் கடற்படை உயர் அதிகாரி உட்பட பல கடற்படையினர் கொல்லப்பட்டனர். கடற்படை முகாம் கட்டிடங்களும் ரொக்கற் தாக்குதலினால் பெரும் சேதத்துக்குள்ளாகின.

தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் சார்பில் எந்த வித இழப்புகளுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக இருந்த திருகோணமலை, மூதூர் போன்ற பகுதிகளில் 1948ம் ஆண்டின் பின்பு சிறீலங்கா அரசாங்கங்களினால் திட்டமிட்டு சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. இன்று அண்ணளவாக 50 % வரை சிறீலங்கா அரசினால் அத்துமீறிக்குடியேற்றப்படட சிங்களவர்கள் திருகோணமலைப் பகுதியில் காணப்படுகின்றனர். கடந்த பொதுத் தேர்தலில் சிங்களவர்களிற்கென சேருவில எனும் ஓர் தேர்தற் தொகுதியும் திருகோணமலையிலிருந்து பிரிக்கப்பட்டது. மகாவலி ஆற்றுத் திட்டத்தையும் அங்கு நிறுவப்பட்ட பிரிமா மா ஆலை போன்ற தொழிற்சாலைகளையும் சாட்டாக வைத்து சிறீலங்கா அரசு மேலும் மேலும் சிங்களக் குடியேறறங்களை ஏற்படுத்தி வந்தது கடந்த காலங்களில் அம்பாறை, பதவியா, கந்தளாய் போனற பகுதகளை சிங்களமயமாக்கியதுபோல திருகோணமலையையும அபகரிபபதற்கு அரசு திட்டமிட்டிருந்தது.

தமிழீழத்தின் வடக்கு, தெற்குப் பகுதிகளிற்கு இடையில் இருக்கும் திருகோணமலையை முதலில் முற்றாக சிங்களமயமாக்குவதன் மூலம் தமிழ்பேசும் மக்களிற்கிடையேயானதொடர்புகளைத் துண்டிப்பது, பின்னர் சிங்களப் பிரதேசத்தில் சூழப்படும் தமிழீழத்தின் தெனபகுதியை படிப்படியாக சிங்களமயமாக்குவது என்ற அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரையுமே அழித்துவிடுவதே அரசின் திட்டமாக இருந்தது.

தமிழ்பேசும் மக்களிற்கு பாரம்பரிய பிரதேசங்கள் என்று எதுவும் இல்லை என்ற 'ஜயவர்த்தனாவின் நிலைப்பாடு சிங்கள மக்களுடன் கலந்து வாழும் பகுதிகளில் போராளிகளினால் தாக்குதல் எதையும் மேற்கொள்ள முடியவில்லை. என்ற லலித்தின் புரளி என்பவற்றிற்கு ஒரு பதிலடியாக குச்சவெளி பொலிஸ்நிலையம், கடற்படை முகாம் என்பன மீதான தாக்குதல்கள் அமைகின்றன.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான லலித்தின் திட்டமாகிய ''வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரையும் இரண்டு லட்சம் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுதல்'' என்பதை விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தவிடுபொடியாக்கியுள்ளன.



### குச்சவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

1) 7.62 Self Loading Rifle (nato) ... 10
2) 9.m.m Sterling Sub Machine gun **U. K** ... 05
3) 303 Mark - 4 Bolt action rifle **U. K** ... 24
4) Smith & Wession Pumping action repeater **U.S.A** ... 36
5) 12 Bore **"Remington"** Shot gun Germany ... 22
6) Revolver ... 03
7) Hand Grenade **T. N. T** ... 06
   **J. R** ... 21
8) Ammunitions (Rounds) ... 7022

*Other things:-*

1) Television ... 01
2) Video Deck ... 01
3) Radio ... 01
4) Helmet ... 05

### மூதூர் கண்ணிவெடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

1) 303 Light Machine gun ... 01
2) 7.62 Self Loading Rifle ... 01
3) Chiness Type 56 (T. 56) ... 03
4) Ammunitions (Rounds) ... 103
5) Hand Grenade ... *06*
6) L. M. G. Extra Baral ...

# லலித்தின் புரளி

மன்னார் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றைத் தாக்கி பெருந்தொகையான ஆயுதங்களையும் போராளிகளையும் கொன்றதாக அரச பயங்கரவாத அமைச்சர் தனது 'வழமையான புளுகுப் போட்டியில் இறங்கியிருந்தார். உண்மையில் மன்னாரில் நிகழ்ந்தது என்ன?

மன்னாரிலுள்ள விடுதலைப் புலிகளின் பல தளங்களில் ஒன்று தமிழ்த் துரோகி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டது. 15-6-85 அன்று பெருந்தொகையான இராணுவத்தினர் ஹெலிகப்டர்களில் புலிகளின் தளத்திற்கருகில் கொண்டுவந்து இறக்கப்பட்டு தளத்தை முற்றுகையிடுவதற்காக முன்னேறிக்கொண்டிருந்தனர். உடனடியாக தளத்திற்குத் தகவல் தரப்பட்டது.

போராளிகள் துரித கதியில் செயற்பட்டனர், தளத்தைச் சுற்றி எல்லாப்பக்கங்களும் காவல் போடப்பட்டது, தளத்திலிருந்த முக்கிய ஆவணங்கள், ஆயுதங்கள், ஏனைய பொருட்கள் யாவும் ஒரு வழியால் வெளியே கொண்டு செல்லப்பட்டன. விடுதலைப் புலிகளின் வீச்சான துப்பாக்கிப் பிரயோகமும் பயங்கர எறிகுண்டுத் தாக்குதல்களும் எதிரியை நெருங்க முடியாது தடுத்து வைத்திருந்தது. அனைத்துப் பொருட்களும் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர், சிக்கலான ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு 303 றைபில்களையும் சில ''செல்''களையும் மட்டும் விட்டுவிட்டு போராளிகள் அனைவரும் பத்திரமாகதளத்திலிருந்து வெளியேறினர்.

எமது போராளிகளிற்கு சிறிய காயங்கள்கூட ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரச பயங்கரவாதத்திற்கென மிகப் பெரும் தொகைப் பணத்தை செலவிட்டும். SAS மொசாட் போன்ற சர்வதேச பயங்கரவாத நிபுணர்களைக் கொண்டு கடும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டும் அரச பயங்கரவாதிகள் தமிழீழப் போராளிகளிடம் படுதோல்வியடைந்து வருவதை எப்படியாவது கண்ணாடிச் சேலையால் திரையிட்டு மறைத்துவிடத் துடிக்கும் லலித் அத்துலத்முதலி இத்தகைய போலிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார்.

முதல் நாள் மறைந்த போராளிகளின் தொகை 18ஆகக் இருந்து அடுத்தநாள் 100 ஆக அதிகரித்தது அதற்கடுத்தநாள் மீண்டும் 18 ஆகக் குறைந்த வித்தையை லலித்தினால் அன்றி வேறெவராலும் சய்யமுடியாது.

# மொஸாட்டின் தந்திரத்தை முறியடிக்க ஒன்று திரள்க

**இந்து முஸ்லிம் கலவரம் சம்பந்தமாக உண்மை நிலைகுறித்தும் அதைக் கட்டுப்படுத்தவும் தமிழீழத்தின் தென் பகுதியில் (கிழக்கு மாகாணம்) விடுதலைப் புலிகளினுல் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத்தின் சாராம்சம்**

வரலாறு தொட்டு இரண்டறக்கலந்து வாழ்ந்துவரும் தமிழ்பேசும் இனங்களின் பங்களிப்புடன் வெற்றி நடைபோட்டு வரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியிலும் முதிர்ச்சியிலும் அதிர்ச்சிகண்டு நிலைகுலைந்துபோன சிறிலங்காப் பேரினவாதிகள், சர்வதேச பயங்கரவாதிகளும் என்றுமே இஸ்லாத்தின் பரமஎதிரியுமான ''மொஸாட்'' உதவியுடன் முழு நாட்டையும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரிய தேசமாக மாற்ற புதியதொரு புத்தியைக் கையாண்டிருக்கின்றனர். தமிழ் முஸ்லிம் மக்களின் உடமைகளை சூறையாடியும் சேதம் விளைவித்தும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் எம்மிரு இனத்தவரின் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்தும் எமது பாரம்பரிய பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் அம்பாறை, கந்தளாய், மூதூர் (சேருவில்) பகுதிகளில் எம்மிரு இனத்தவரையும் சிறுபான்மை இனமாக்கியதுடன் மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''சிங்கபுரா'' என்ற புதியதொரு குடியேற்றத்தை நிறுவியும் அம்பாறை மாவட்டத்தில் ''திகவாபி'' திட்டங்களினுல் முஸ்லிம் மக்களின் காணிகளைப் பறித்தெடுத்து எம்மை இன ரீதியாக அழித்துவரும் சிறிலங்கா அரசானது, எமது கையைக்கொண்டே எமது கண்ணில் குத்த முயலும் முயற்சியாக தமிழ் பேசும் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது.

இவர்களின் திட்டத்திற்கு ஒத்தாசை புரிவதுபோல் எமது போராட்டம் தனித்து தமிழ் மக்களுக்கானது என்பதுபோல் கருதக்கூடியதாகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிரானது போலவும் தோற்றமளிக்கக்கூடிய சில நடவடிக்கைகளை ஒரு சில இயக்கங்கள் மேற்கொண்டது வருந்தத்தக்கதாகும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை பின்னேக்கிச் செல்லக்கூடியதான முயற்சிகளை மேற்கொள்ளும் எல்லாச்சக்திகளையும் நாம் கண்டிக்கிறோம். மேலும் இந்நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கிறோம்.

கிழக்குப்பகுதிகளில் நடைபெறுவது சில தீயசக்திகளின் செயற்பாடேயெனவும் தமிழ் முஸ்லிம் கலவரமல்ல என்பதையும் தமிழ்பேசும் மக்கள் நன்குணர்ந்துள்ளனர். காரைதீவு சம்பவத்தில் வெளியூர்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காடையர்களும் பொலிஸ் கொமாண்டோக்களும் ஈடுபட்டதானது அரசின் கபடத்தனமான திட்டத்தைப் பகிரங்கப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஹெலிக்காப்டரிலிருந்து எறிகுண்டுகளை வீசயிருந்தமையும் காரைதீவைத்தாக்க மறுத்த நிந்தவூர், சம்மாந்துறை முஸ்லிம் மக்களை பொலிஸ் மொண்டோக்கள் தாக்கியதையும் தமிழ்பேசும் மக்கள் அறிவார்கள் மன்னுரில் நடந்த அசம்பாவிதம் வானெலியில் திரித்துக்கூறப்பட்டு இக்கலவரத்துக்குத் தூபமிடப்பட்டது.

சிங்கள பௌத்தர் ஒருவரே இந்நாட்டின் சபாநாயகராகவும் எதிர்க்கட்சித்தலைவராகவும் இருக்கவேண்டுமென்ற மகா சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க சபாநாயகர் ஆசனத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு ஜே. ஆரின் சட்டைப்பைக்குள் ராஜினமாக்கடிதத்தைக் கையளித்து விட்டிருக்கும் இலாகா இல்லாத அமைச்சரோ அல்லது ஏனைய தமிழ் முஸ்லிம் அமைச்சர்களோ நடைபெற்ற இத்துரதிட்ட சம்பவங்களை தடுத்து நிறுத்தமுடியாது இந்த மொஸாட்டின் ஆலோசனைக்கு முன்னுல் வாயடைத்துப் போயிருந்த நிலைமையையும் இன்னும் இந்திய இணை அமைச்சர் ஆலம்கானின் கூற்றுக்கு எதிராக ஒரு சில முஸ்லிம் மக்களை தூண்டிவிட முயற்சியெடுத்து அம் முயற்சிகள் தோல்வியடைந்ததையும் தமிழ் பேசும் மக்கள் நன்குணர்வார்கள். துரதிஷ்டவசமாக முஸ்லிம் மக்களிடம் கொள்ளையடித்தும் கப்பம் வாங்கியும் வந்த இயக்கங்கள் (?) இப்போதாவது தமது தவறை உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறும்.

வாழைச்சேனை காகிதஆலை ஊழியர்களுக்கோ அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தமது நாளாந்த அலுவல்களுக்கும் பழைய வாசஸ்தலங்களுக்கும் திரும்பும் முஸ்லிம் மக்களுக்கோ எவ்வித தீங்கும் ஏற்படுத்த வேண்டாமெனவும் இரு தரத்தினரையும் வேண்டிக்கொள்ளுகிறும். இதுவரை நடைபெற்ற சம்பவங்களைக் கிண்டிக் கிளறி சுமுக நிலை ஏற்படும் ஒரு நல்ல சந்தர்ப்பத்துக்குப் பங்கம் ஏற்படாமல் நடந்து கொள்ளும்படி இரு சமுகத்தவர்களையும் வேண்டிக்கொள்வதுடன் இனிமேலும் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடுமையாக நடந்துகொள்ளநேரிடும் என்பதையும் அறியத்தருகிறோம். எம்மிரு இனத்தவர் இடையேயும் குரோத உணர்வை வளர்க்க முயலும் அறிக்கைகளையும் பிரசுரங்களையும் வெளியிடவேண்டாமெனவும் வேண்டிக்கொள்ளுகிறேம்.

அரச அட்டுழியத்தின் நரித்தனமான திட்டத்தை முறியடிக்க ஒன்று திரள்க.
வளர்க தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை.
வெல்க தமிழீழம்,

## மக்களுக்கான கலை

கலை தெய்வீகமானது. புனிதமானது. அதில் சம்பிரதாயங்கள் மரபுகள் என்பன மாற்றப் படக்கூடாது; கலை கலைக்காகவே என்று கூறுவதெல்லாம் விதண்டாவாதங்களாகும். கலையில் வளர்ச்சியையோ புதிய வெளிப்பாடுகளையோ கொண்டு வரக்கூடாது என்று அடம் பிடிக்கும் பழமை வாதிகளின் கூக்குரல் தான் இந்தக் கலை கலைக்காகவே என்னும் வாதம் அப்படியாயின் கலை யாருக்காக என்ற கேள்வி எழும் ஆம் கலை மக்களுக்காக மக்களை அறிவூட்டும் ஒரு செய்தியை எடுத்துச் செல்வதாகவும் அவர்களது விடிவுக்கான வழியைக் காட்டுவதாகவும் கலை அமைய வேண்டும்.

அதாவது கற்பிக்கும் கலை என்று நாம் பேச்சு வழக்கில் பாவிக்கின்றேம். மாணவர்களுக்கு ஒரு விடயத்தை தெளிவாக எடுத்து விளக்குவதும் ஒரு கலை தான். போர்த் தந்திரோபாயங்களைக் கையாள்வதும் ஒரு வகைக் கலைதான் எதிரி யார்? நண்பன் யார்? என்று விளக்கி மக்களைப் பாதுகாத்து மக்களுக்கான சரியான அரசியலை உருவாக்குவதும் கலைதான், இவ்வாறே தெளிவான செய்தியை மக்களிடையே எடுத்துச்செல்லும் நாட்டியம், நாடகம், கவிதை, சினிமா என்பனவும் கலை வடிவங்களே.

இதைவிட்டு கலையில் மாற்றம் எதையும் கொண்டு வரக் கூடாது, கலையைப் பிரச்சார சாதனமாக்கக் கூடாது என்று ஒரு சாராரும் கலை என்பது சும்மா பொழுது போக்குக்காக என்று ஒரு சாராரும் கூறி இவர்கள் உண்மையான கலையை வளர விடமாட்டார்கள். மக்களைத் திசை திருப்ப எத்தனிப்பார்கள்.

ஆளும் வர்க்கங்கள் தம்மைப் பாதுகாக்கும் கலையையும் ஒடுக்கப்பட்ட மக்கள் அடக்குமுறைக் கெதிரான மீட்சியையும் நம்பிக்கையையும் அளிக்கும் கலை வடிவத்தையும் தேர்ந்தெடுப்பது என்பது ஒரு தற்செயல் நிகழ்ச்சியல்ல. இன்று நாம் பார்க்கும் பெரும்பாலான சினிமா,பத்திரிகைகள் என்பவை ஆளும் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் மக்களை உண்மையான உலகைப் பார்க்க விடாது ஒரு வித போதை மயக்கத்தில் வைத்திருப்பதாகவும் தான் இருக்கின்றது இதிலிருந்து நாம் விடுபட்டு சரியான கலை வடிவத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டிய தேவை எமக்கு அதிகரித்து வருகின்றது.

அடக்கு முறைக்குள்ளாக்கப்பட்டு விடுதலைக்காக ஏங்கிக் கதறி நிற்கும் மக்களுக்கு ''குழலூதி மனமெல்லாம் கொள்ளை கொண்டதின் பின்பு குறையேதும் நமக்கேதடி'' என்றும் ''தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன் தெருவிலே பெண்களுக் கோயாத தொல்லை'' என்றும் ''அலைபாயுதே கண்ணு என் மனம் அலைபாயுதே'' என்றும் திரும்பத் திரும்ப பாடி அபிநயம் பிடித்தால் அவர்கள் குறை தீருமா, விடுதலைக்கான மார்க்கந் தான் கிடைத்திருக்குமா? ஆனுல் எத்தனையோ விதமான உணர்ச்சிகளையும் குறியீடுகளையும் கொடுக்கக் கூடிய இதே பரத நாட்டியத்தைப் பயன்படுத்தியே மக்களை ஒடுக்கும் எதிரிகளையும் அவர்களின் சங்காரத்தையும் உணர்த்துகின்ற கலைப் படைப்புகளை வெளிக் கொண்டு வருவோம். எமது மக்களின் இயல்பான வெளிப் பாடுகளாகிய பண்டைய நாட்டார்பாடல் கூத்து என்பவற்றை செழுமைப் படுத்தி மக்களுக்கு எமது செய்திகளை எடுத்துச் செல்வோம்.

விரகதாபத்தில் வாடும் காதலி காதலனுக்கு காற்றேடு தூதுவிடும் செய்திகள் எமக்கு இன்று அவசியமில்லை. மாருக 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந் நாடே'' என்றும் இங்கே ,ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்'' என்றும் எனவே எமக்கு ''அச்சமில்லை அச்சமில்லை உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை'' என்று கூறுகின்ற கலைகளை வளர்ப்போம்.

இங்கே ஆயிரம் எண்ணங்கள் மலரட்டும். அவை மக்களிடையே புரட்சிச் செய்தியை எடுத்துச் செல்லும்.கலைகளின் முக்கியத்துவம் இன்று சகலராலும் உணரப்பட்டுள்ளது விடுதலைப் புலிகளின் கலாச்சாரப்படை இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் காத்திரமான படைப்புகளை உருவாக்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேம். மக்களிடையே இருந்து உருவாகும் காலத்தின் தேவையான கலை, இலக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.

# இலங்கையின் அமைச்சர் எம். எச் முகமது — உலக முஸ்லிம்களின் துரோகி!

தற்போது ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண்டிருக்கும் இலங்கை போக்குவரத்து அமைச்சர் எம். எச். முகம்மது இலங்கையில் மொசாட்டினது (இஸ்ரேலிய உளவுச் சேவை) கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு சர்வதேச இஸ்லாமியரின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகிறர்!

ஐக்கிய ராச்சிய இஸ்லாமியப் புரட்சி இயக்கத்தினராகிய - நாம் பிரச்சினைக்குரிய சிறிலங்காவில் மொசாட்டின் பங்கினையும் எம். எச். முகமதுவின் காட்டிக்கொடுப்பு நடவடிக்கைகளை பற்றியதுமான சில உண்மைகள் இத்தால் வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றேம்.

**உண்மை - 1**

திரு. எம். எச். முகம்மது கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்க தூதுவராலயத்தின் விசேட நலன் பிரிவுக் காரியாலயத்திற்கு அடிக்கடி விஜயம் செய்வது அவதானிக்கப்பட்டுள்ளது.

**உண்மை - 2**

1985-ம் ஆண்டு ஜனவரி 21-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 9.15இற்கும் பி. ப. 11.32 இற்குமிடையில் கொழும்பி லங்கா ஒபரோய் ஹோட்டலில் திரு. ஆவ்ர உஹாம் யோஃப் எனப்படும் விசேட மொசாட் ஏஜன்டிற்கும் அமைச்சர் முகம்மட்டிற்குமிடையில் ''இரண்டு மணித்தியால இரகசியப் பேச்சு வார்த்தை'' ஒன்று நடைபெற்றது என்பதற்கான தடிந்த ஆதாரங்கள் எம்மிடம் உண்டு!

**உண்மை 3**

முஸ்லிம்களை, இறிஸ்தவர்கள் இந்துக்கள் ஆகியோரை உள்ளடக்கிய இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மிக அமைதியான வாழ்க்கைவாழ்ந்து வந்த சமயப் பேதமற்ற முற்போக்கான ஒரு சமூகம் ஆகும். அதே வேளையில் சிறிலங்கா அரசாங்கங்கள் பலதடவைகள் எமது பகுதிகளின் புனிதத் தன்மையைக் கெடுத்தும் காலத்துக்குக் காலம் நூற்றுக்கணக்காண அப்பாவி முஸ்லிகளைக் சிங்களக் காடையர்களை பாதுகாப்பற்ற முஸ்லிம் மக்களுக்கெதிராக மோதவிட்டும் வந்துள்ளது! முஸ்லிம் விவசாயிகளின் காணிகளைப் பறித்துக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் அங்கு சிங்கள மக்களைக் குடியமர்த்தியும் பௌத்த கோவில்களை கட்டியும் வந்துள்ளது. இப்போது தமிழ் பேசும் முஸ்லிம்களை ஏனைய தமிழ் மக்களுடன் மோதவிடுவதன் மூலம் ''மொசாட்'' இனுடைய கரங்களில் இப் பிற்போக்கு அரசாங்கம் நேரடியாக விழுந்துள்ளது!

**உண்மை - 4**

மொசாட் இயலுமான இடங்களில் எல்லாம் ''இஸ்லாமிய மக்களை பிரி, ஆளு, அழி'' எனும் தந்திரத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. என்பது இன்று வெளிப்படை உண்மையாகும்! இன்று சிறிலங்காவிலுள்ள முஸ்லிம் மக்களை அவர்கள் குறிவைத்துள்ளனர்.

சிறிலங்காவின் இஸ்லாமிய மக்கள் வளம் பொருந்திய சந்தோசமான அமைதி விரும்பும் சமூகத்தவர் என்பதை மீண்டும் ஒரு தடவை கூறிக் கொள்ளவேண்டும். மொசாட்டினுடைய வருகையும் அவர்கள் கையாளும் கீழ்த்தரமான தந்திரங்களும் காரணமாக சிறிலங்காவின் தற்போதைய பிரச்சினைகளில் அங்குள்ள முஸ்லிம்கள் பணயம் வைக்கப்பட்டுள்ளனர்! எம் எச், முகம்மதுவைப் போன்ற துரோகிகள் இஸ்ரேலிய மொசாட்டிற்காக செய்யும் கீழ்த்தரமான நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்திக் கொள்ளாது விட்டால் சிறிலங்கா முஸ்லிம் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்புகள் ஏற்படும்.

ஐக்கிய இரரட்சிய இஸ்லாமிய புரட்சிகர இயக்கத்தினுல் வெளியிடப்பட்ட அறிக்கை: இது இஸ்லாமிய ஐக்கியத்திற்கும் புத்துயிர்புக்குமாக முஸ்லிம் நாடுகள் எங்

### விமானப்படை தாக்குதலுக்கு தயாராகிவிட்ட விடுதலைப் புலிகள்

இந்த வகையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட



தாக்குதலில் பலவிமானங்கள் சேதத்திற்குள்ளாயின.

அண்மையில் நாகர் கோவிலில் ஹெலிகப்டர் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.





# விழிப்பாக இருங்கள்

போர் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்தைவிட போர் நிறுத்திவைக்கப்பட்டுள்ள காலத்திலேயே மக்கள் மிகவும் விழிப்பாக இருத்தல் அவசியமானதாகும். சிறிலங்கா அரசு திடீரென அறிவித்துள்ள போர்நிறுத்த வேண்டுகோளின் அடிப்படை உள்நோக்கம் என்பவற்றை அறிந்து கொண்டு சாதுரியமாக செயற்படுவது விடுதலைக்காகப் போராடும் மக்களின் முக்கியபொறுப்பாகும்

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட சிறிலங்கா அரசின் பிரச்சார சாதனங்களான வானொலி, ரூபவாஹினி, பத்திரிகைகள் என்பன எமது விடுதலைப் போராட்டத்தையும்,மக்களையும்கொச்சைப் படுத்தும்விதத்தில் மேற்கொள்ளும் பிரச்சாரங்கள் எமக்கு எதைஉணர்த்துகின்றன?எமது போராட்டத்திற்கு ஈடுகொடுத்து நிலைகொள்ள முடியாத அரசு போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தவிர்க்க முடியாத வகையில் முன்வந்துள்ள போதும் எமது போராட்டத்தை இன்னும் விடுதலைப் போராட்டமாகஏற்றுக் கொள்ளாமை அரசின் உள் நோக்கத்தை தெளிவு படுத்துகிறது.

எமக்கெதிராக இழைக்கப் பட்டுவரும்கொடுமையான அநீதிகளை உடைத்தெறிவதற்கான எமது போராட்டத்தில் நாம் முன்னேறி வரும்போது எம் மீது பலவழிகளிலும் அடக்குமுறைகள் திணிக்கப்பட்டன. அதனையும் பொருட்படுத்தாது எமது மக்கள் புரிந்த தியாகம் மிக்க போராட்டத்தை எதிர் கொள்ளமுடியாது. அரசஇராணுவம் சிதறியோடிய போது எம்மை அடக்குவதற்கு சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் ஒரு சதி நடவடிக்கையே இன்றைய போர் நிறுத்த அறிவிப்பு என்பதைநாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவ நடமாட்டமும் தடை வலையச்சட்டமும் அகற்றப்பட்டவுடன் நாம் விடுதலையடைந்து விடுவோமா? எமது

புரிந்த தியாகங்களையும் மறந்து விடலாமா?

தமிழ் பேசும் மக்களிற்கு பிரச்சனைகள் எதுவும் இல்லை பயங்கரவாதம்தான்அங்குள்ள ஒரே ஒரு பிரச்சனை என சர்வதேச ரீதியில் போலிப் பிரச்சாரம் செய்வதற்கு வழிபார்த்து நிற்கும் சிறிலங்கா இனவாதத்திற்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு எம்மவர்களையே நாம் அனுமதிக்கமுடியாது

போர் நிறுத்தத்தின் பின் தமிழ்ப் பிரதேசங்கள் சகஜ நிலையை அடைந்து விட்டன. மக்கள்சாதாரணமாக சந்தோஷமாக வாழ்க்கையை ஆரம்பித்து விட்டனர். இராணுவத்தினர் மக்களுடன் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகுகிறார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்வதன் மூலம் எமது அடிப்படைப் பிரச்சினையை மறைப்பதற்குளம்மிற் சிலர் அரசிற்குஉதவியாக இருப்பதை தமிழ் பேசும் மக்கள் எவ்விதத்தில் அனுமதிப்பர்

எமது மக்கள் சித்திரவதைப்படுத்தப்பட்ட எமது பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட, எமது இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட மைதானத்தின் மேல்நின்று,எமது மக்கள் சிந்திய இரத்தம்காயமுன்பு எதிரியுடன் சினேக பூர்வ விளையாட்டுக்களில் ஈடுவடுவது எவ்விதத்தில் நியாயமாகும்.

இன்னும் அங்கேஅடைபட்டுத் தவிக்கும் அப்பாவி இளைஞர்களின் முனகல் ஒலி கேட்டுக்கொண்டிருக்கும் போதே வெளியில் மைதானத்தில்விளையாட்டு ஒலி எழுப்புவதுஎமது மக்களிற்குச் செய்யும் துரோகமும் அவமானமும். ஆகும்

சினேகபூர்வவிளையாட்டிற்குச் செல்வோரும் வாசலில் வைத்து பூரணமாக சோதனையிடப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அந்தளவிற்கு எமது இனம் முழுவதையுமே கீழ்மைப்படுத்தி ஒரு சிலர்சிறு லாபங்களைச் சம்பா

சிறீலங்காஇராணுவம்சிறிதளவுகூட ஒழுங்குக் கட்டுப்பாடு அற்றது என்றும், அப்பாவித் தமிழ் மக்களிற்கெதிராக மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்றும் உலக நாடுகள் எல்லாமே அபிப்பிராயம் கொண்டுள்ளன. இந்த நிலையில் சிறீலங்கா அரசு இதற்கெதிராக சர்வதேசரீதியில் தீவிர பிரச்சாரம் செய்வதற்குஎமது மக்களிற்கும் இராணுவத்திற்குமிடையே நல்லுறவு உள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உடந்தையாக நாமே செயற்படலாமா?

தமிழ் பேசும் மக்களுடன் ஒரு போலியான நல்லுறவை ஏற்படுத்த அரசபடைகள் முயற்சிக்கின்றன இதன்மூலம்எமது புனிதமான போராட்டத்தைச் சீரளித்து எம்மை அடிமை கொள்ள சிறீலங்கா அரசு ஆசைப்படுகிறது.

இந்நிலையில் நாம் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். எதிரி எம்மத்தியில் ஊடுருவுவதற்கு நாம் சிறிதுகூட இடமளித்தல் ஆகாது. எத்தனையோ தியாகங்களின் மேல் கட்டி வளர்க்கப்பட்ட இன்றைய புரட்சிகர நிலைமையை சிறிதளவாவது மழுங்கடிக்கும் செயல்களை நாம் அனுமதிக்கக் கூடாது.

தமிழ் பேசும் மக்களிற்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்களே. எம்மத்தியில் ஏற்றத்தாழ்வுகளில்லை. ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், படித்தவன்-படிக்காதவன் என்று எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாததே எமது இலட்சிய தமிழீழம்.

சமூகத்தில் தம்மை உயர்ந்த அந்தஸ்த்து உடையவர்கள் என தாமே பிரகடனம் செய்துகொண்டு தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளும் செயற்பாடுகள் முழுத்தமிழ் சமுதாயத்தையும் பாதிப்பதை அனுமதிக்க முடியாது.

சந்தர்ப்பவாதிகளையும், சமரசவாதிகளையும் நிராகரித்து ஒட்டுமொத்தமாக விடுதலைக்

## நாவாந்துறை மண்ணில் இடம்பெற்ற வேதனைமிக்க சம்பவம்

போராட்டம் படிப்படியாக வளர்ச்சிக் காலகட்டங்களினூடாக வளர்க்கப்பட்டு வருகின்றது. ஒரு கட்டத்தில் பொலிஸ் சேவைகள் முற்றாக நிர்முலமாக்கப்பட்டு சிவில் நிர்வாகம் குலைக்கடபடுகின்றது இதுசந்தர்ப்பத்தில்சமூகவிரோதிகள் இலகுவாக கிளர்ந்தெழுவர்சமூகவிரோதசெயல் களுக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரக் காரணிதான் ஆனல் இவர்களின் செயற்பாடுகள் காடைத்தனம் மிக்கதாயும் தான் தோன்றித் தனமாயும் அமையும் போது நாம் அங்கு தலையிட வேண்டிய நியாயமான நிலைக்கு தள்ளப்படுகிறோம். எமது நோக்கு ''சமூக விரோதிகள் அனைவரும் அழிக்கப்படுவதல்லசமூகவிரோத செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் என்பதுவே.

இந்த வகையில்பொம்மை வெளியிற்கருகில் ஒதுக்குப் புறமாக இருக்கும் குடியேற்றத் திட்டமொன்றில் உள்ளபெண்கள் ஆண்கள் வேலைக்குப் போன சமயத்தில்தாம் தொடர்சியாக மானபங்கப்படுத்த படுவதாக தெரிவித்தனர். இதற்கு ஒரு பரிகாரம்காணும்படி கண்ணீரோடு முறையிட்டனர்.

அப்பகுதி மக்களின் துன்ப துயரங்களுக்கு பரிகாரம் காணும் வகையில் சம்பந்தப் பட்ட அந்த நபரைப்பிடிக்க விடுதலைப் புலிகள் காவலிருந்தனர்.

காவலிருந்த விடுதலைப் புலிகள் கையும் மெய்யுமாக சம்பந்தப்பட்டரை பிடித்து கற்பழிக்கப்பட்ட பெண்களிடம் ஊர்ஜிதம் செய்து மேல் விசாரணைக்காக கொண்டு வந்தனர்.

கொண்டுவரும்இடைவழியில்அந்நபரின்உறவினர்கள்எம் தோழர்களை தாக்கிஅச்சமூக விரோதியை தம்முடன் அழைத்துச்சென்றனர். இதையடுத்து அந்தப்பகுதிக்குபொறுப்பான எமதியக்க உறுப்பினர் ஒருவர் அச் சமூக விரோதியின் உறவினர்களிடம் சென்று நடந்த சம்பவத்தைப் பற்றி நீதி கேட்ட போது அவரைகண்டபடி பேசி அவரைத் தாக்க முற்பட்டனர்.

சம்பந்தப்பட்ட சமூக விரோதியை மக்கள் முன் விசாரித்து கற்பழிக்கப்பட்ட பலபெண்களின் முன்னிலையில் அவரை நன்கு ஊர்ஜிதம் செய்து மேல் விசாரணைக்காக கொண்டு வர முடிவு செய்தோம்.

அவரைமேல்விசாரணைக்காக வானில் ஏற்றிய போது ஒருஇயக்கத்தில்உள்ள அச்சமூக விரோதியின் புரிந்துணர்வற்ற தமையன் உறவினர்கள் வானின் குறுக்கே சைக்கிள்களைப் போட்டு வான் சாவியை பிடுங்கி அடாவடித்தனங்களில் இறங்கினர். இவர்களை எம்மால் வேறு வழிகளில் இலகுவாக சமாளித்திருக்க முடியுமெனினும் நாம் மிகப் பொறுமையை கடைப்பிடித்து எவ்வளவோ விளக்கங்கள் அளித்தோம் இவைகளைஅவர்கள் ஏற்காமல் தாம் ஸ்தாபன ரீதியாகவேசெயற்படுகிறோம்என்றுகூறி பல அடாவாடித் தனங்களில் இறங்கினர். அநாவசியமான சுடு பாடுகளைத் தவிர்க்க அச் சமூக விரேதியை அவ்விடத்திலேயே விட்டுத்திரும்பினோம்?

இன்னும் சம்பந்த பட்டவர்களில் 14வயது சிறுமி ஒருவர் அண்ணை நாங்கள் மானம் மரியாதையோட வாழ வழியில்லையா?எனக்கேட்டது.எம்காதுகளில் ஒலித்தவாறே உள்ளது. இதில் சம்பந்தப்பட்ட புரிந்துணர்வற்ற அவ் இயக்க உறுப்பினர்களுக்கு!

நாளை உங்களின் தங்கை அம்மா அக்கா ஓர் கட்டுக்கடங்கா சமூக விரோதியால் கற்பழிக்கப்பட்டால் கூட நீதி நியாயம் கேட்பது நாம்தான் உங்கள் தனிப்பட்ட உறவுகளுக்காக—அதுவும் ஓர் சமூக விரோதிக்காக துணை போகும் நீங்கள் விடுதலைப் போராளிகள் எனும் தகைமையை இழக்கிறீர்கள் பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்டதே நீதி நியாயம் உங்கள் இழி செயல்களால் ஸ்தாபனத்தின் பெயருக்கு இழுக்கு தேடாதீர்கள். இயக்கங்கள் மக்கள் மத்தியில் நேர்மையானதாகவும் ஒழுக்கமானதாயும் மதிக்கப்படுகின்றன.

எனவே பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனத்தின் உறுப்பின

தமிழீழ போராட்ட வரலாற்றில் - உதிர்ந்த சில இளம் உயிர்கள்

இவ் இளசுகளின் தற்தியாகம் மிக்க உதிர்வுகள் உரமாகி போராட்டம் ஆயிரம் மடங்கு வளர்ந்து வலுப்பெற்றது!

# இன்று மக்களும் அணி வகுக்கின்றனர் தமிழீழம் உண்மையாகிவிட்டது




## அன்பு



தனபாலசிங்கம் (வெத்திலைக்கேணி)

''ஓ'' எம் தோழா உன் அன்பான நடத்தையால் உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம் எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னை சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றம் உடையவன் என்றோ நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும் தினவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்திகேட்டு உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர் சொல்ல முடியாதது. உன் வீரம் செறிந்த தியாகவரலாறு ஒவ்வொரு மக்களும் அறிய வேண்டியது?

இராணுவமுகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடைசெய்யும் பெரும்பணியை செவ்வனே செய்து முடித்தவன். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கு முன்பாகவே குருநகர் முகாமுக்குமிக அண்மையில் சென்று கண்ணி வெடியை நிலைப்படுத்தவேண்டும்: இது சரிவர நடந்தேறினல் மட்டுமே பொலிஸ் நிலையத்தாக்குதல் நடைபெறமுடியும் இச்செயல் இடையில் குழம்புமானல் பொலிஸ் நிலையத் தாக்குதல் மட்டுமல்ல அதை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் எம் ஏனைய தோழர்கள் கூட உயிராபத்தை எதிர் நோக்கும் இக்கட்டான நிலைமை. இராணுவத்தினர் இரவு ரோந்துக்கு புறப்படும் முன் கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும் பொலிஸ் நிலையத்தாக்குதல்

பொறுப்பான வேலைக்காக ''வெடிமருந்து'' Explosiveல் தேர்ச்சிபெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.

வெற்றிகரமாக கண்ணி வெடிகளை நிலைப்படுத்திய அன்பு G3 A3 என்ற தானியங்கி ரைபிளை தாங்கி பொலிஸ் நிலையத்தாக்குதல் தொடங்கியதும். முகாமை விட்டு புறப்பட்ட ராணுவத்தினர் மீது G3 A3 ஆல் சரமாரியாக ''இந்தா'' ''இந்தா'' என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை இப்போதும் தோழர்கள் நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ் இடத்தை விட்டு வெளியேறும்வரை மிகப்பலம் பொருந்திய குருநகர் முகாமில் இருந்து எந்த ஒரு கவசவாகனங்களோ, அல்லது ராணுவப்பிரிவையோ வெளியேருடல் தடுத்து எம் வெற்றிக்கு உறுதி அளித்தவன் அன்பு.

எம்மோடு தங்கி இருக்கும்போது ஒரு நாள் அன்பு தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை மெதுவாக வெளியே எடுத்தான் ஒரு நிழல்படம் கையிலிருந்து நழுவி கீழே நிலத்தில் விழுந்தது. அன்பு அதை எடுத்தான் அவன் நெஞ்சு படபடத்தது. படத்திலிருந்து அவனை நோக்கியது பழக்கமான, அழகிய அவனின் காதலியின் உருவம் சாறி அணிந்திருந்தாள் அது அவளுக்கு மிகவும் இசைந்திருந்தது. ஒடிசலான கொடி இடை உடைய அந்த அழகிய பெண்ணின் ஒளிவீசும் பெரிய வட்ட விழிகள் அன்பை ஊடுருவும் நோக்குடன் பார்த்துக் கொண்டிருந்தன;

அன்பு அந்த விழிகளை நெடுநேரம் நோக்கியவாறு இருந்தான் அவன் உள்ளம் இனந்தெரியாத இனிய சோகத்தால் நிறைந்தது விருப்பமான சோகப்பாட்டு ஒன்று மாலை வேளையில் தூரத்தில்

நிழற் படத்தின் மறுபக்கம் ''அன்பே மறந்துவிடாதே'' என்று எழுதப்பட்டு இருந்தது. அதனுடன் இருந்த கடிதத்தை மீண்டும் படித்தான் கணக்கிடமுடியாத தடவைகள் மீண்டும் மீண்டும் படித்ததால் கடிதம் கசங்கி மடிப்புக்களில் விடத்தொங்கி இருந்தது. நிழற் படத்தை மீண்டும் பார்த்தான்.

எதிா பார்த்துக் கொண்டிருக்கிறயா? எதிர்பார் எதிர்பார்! காதலிக்கிறயா? காதலி காதலி,! இனியவளே, தமிழீழம் கிடைக்கட்டும் நாம் இன்பமாக வாழலாம் என்று அவன் முணுமுணுத்தது எம் காதுகளுககு கேடடதோ அல்லது நாம் உணர்ந்து கொண்டோமோ தெரியவில்லை.

நாம் தாக்குதல்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் ''ரொக்கட் லோஞ்சரை'' அன்புதான் எடுப்பான் அதை தூக்கிச் செல்லும் உடல் வலுவும், சிறந்த பயிற்சியும் அன்பிடம் இருந்ததால் அவனை நாம் ''டேய்லோஞ்சர்'' என்று அன்பாக அழைத்தோம்.

அன்று காலை நாம் எல்லோருமாக காலை உணவருந்திக் கொண்டிருக்கின்றோம். வெளியில் இருந்து வந்த அன்பு தானும் எம்முடன் சாப்பிடுவதற்காக எம்முடன் பாயில் இருந்து சாப்பிடத்தொடங்குகின்றான் அவனுடைய பார்சலில் ஒரு வடை இருந்ததை கண்ட மற்றைய நண்பன் அதை பாய்ந்து எடுத்தான் அன்பான பறிபாடு, அன்பான ஒப்பந்தம். அன்பான பங்கிடல் மூலம் வடையை பங்கிட்டுக்கொண்டு மிக சந்தோஷமாக, குதூகலமாக உணவருந்திக் கொண்டு இருந்தார்கள. கீழே பாயிலிருந்து சாப்பிடுவதால் தான் இடுப்பில் அணிந்திருந்த கைக்குண்டை

அன்பு வெளியே எடுக்கும்போது கைக்குண்டின் தடை நீக்கப்பட்டு விட்டது அன்புவின் முகம் மாறுகின்றது. கைக்குண்டை உடனே வெளியே எறியவேண்டும் வெளியிலும் தோழர்கள் அமர்ந்திருந்தனர் உடனே தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக் கொண்டான் வெடியதிர்வுகளோ, அல்லது குண்டுச்சிதறல்களோ மற்றைய தோழர்களை பாதிக்கவிடாமல் அவை அனைத்தையும் தன்உடலால் ஏற்றுக் கொண்டான்.

''டமார்'' என்ற பெரிய சத்தம். புகைமண்டலம். நாம் தூக்கி வீசப்பட்டோம். புகை விலகியபோது ''ஓ கோரம்'' அறை எங்கும் இரத்த வெள்ளம். அறைகளில் எல்லாம் சதைத் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கைக்குண்டால் துண்டாடப்பட்ட உடலின் பாகங்கள், மூன்று துண்டுகளாகப்பட்ட உடல்... எம்மை எல்லாம் காப்பதற்காக தன்னுடை உடலால் வெடிகுண்டைத் தாங்கிய அன்பு. துண்டுகளாகக் காணப்பட்டான்.

எம்மோடு பேசிக் கொண்டு இருந்தவன் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவன் திடீரென்று துண்டுகளாகக் கிடக்கும்போது எப்படித்தான் எம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியும்.

உடலை அகற்றும் போது அன்புவின் டயறியின் பாகங்கள் இரத்தத்தில் தோய்ந்து காணப்பட்டது.

அதில் ஒருபக்கத்தில் ''மரணம் ஒருவனை அழிப்பதில்லை'' என்ற வசனம் காணப்பட்டது. ஆம் அன்புவின் மரணம், தியாகம் இன்னும் எத்தனையோ அன்புக்களை உருவாககியிருக்கின்றது

எமது வெளியீடான களத்தில் பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான உங்கள் ஆக்கங்களையும் எம் மக்கள் அனைவரிடமி

# களத்தில்

களம்; 2 | யூன் 1985 | அன்பளிப்பு ரூபா 2-00

# யுத்த நிறுத்தம் என்பது ஆயுதப் போரைக் கைவிடுவதல்ல

**தற்காலிக போர் நிறுத்தத்தின் பயனுக எமது பிரச்சினைகளுக்கு இறுதியான சமரசத்தீர்வு ஏற்படும் என்பதில் எமக்குத் துளிகூட நம்பிக்கையில்லை. இந்தியா தனது நல்லெண்ண முயற்சிக்கு ஒத்து ழைக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க குறித்த சில நிபந்தனைகளை முன்வைத்து பன்னிரண்டு வாரகாலத்திற்கு தற்காலிக போர் நிறுத் தத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளோம், என தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே. பிரபாகரன் வெளியிட் டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்திய மத்தியஅரசின் நல்லெண்ண முயற்சிகள் காரணமாக இன்று எமது விடுதலைப் போராட்டத்தில் புதிய திருப்பங்கள் ஏற்பட்டு வருவது தமிழீழமக்கள் அறிந்ததொன்றே இந்திய நல்லெண்ண முயற்சியின் காரணமாக தமிழீழத்தில் ஒரு தற்காலிக போர் நிறுத்தத்திற்கான சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. ஆயினும் இந்தத் தற்காலிக போர்நிறுத்தம் பற்றி சிறிலங்கா அரசானது மிகவும் தவருன உண்மைக்குமாருன, விசமத்தனமான பொய்ப் பிரச்சாரத்தை கட்டவிழ்த்து வருகிறது. அரசபயங்கரவாத அமைச்சரான அத்துலத்முதலி தனது வழமையான பாணியில் அபாண்டமான பொய்களைத் திரித்து, எமது விடுதலை இயக்கத்தை இழிவுபடுத்த முயற்சி செய்து வருகிருர்.

அரசியல்த்தீர்வு குறித்து எமது நிலைப்பாட்டையும் மக்களுக்கு எடுத்து விளக்குவது அவசியமெனக் கருதுகிறோம். சிறிலங்கா அரசாங்கமே போர் நிறுத்தத்தை விரும்பியது. இதற்குப்பல காரணங்கள் உள்ளன. முதலாவதாக விடுதலைப்புலி வீரர்களின் விடாப்பிடியான வீராவேசமான தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாது தோல்வியின் விளிம்பில் நின்று திணறிக் கொண்டிருந்தது சிறிலங்கா இராணுவம். கட்டுப்பாடுசேர் குலைந்த ஒரு காடையர்கூட்டத்தை வைத்துக் கொண்டு கட்டுப்பாடும், ஒழுங்கும் இலட்சியவேட்கையும் கொண்ட எமது விடுதலைவீரர்களுடன்போரடி வெற்றிபெறுவது முடியாத காரியம் என்பதை சிங்கள ஆட்சியாளர்கள் உணரத்தொடங்கினர். இராணுவப் பாதை தோல்வியை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. என்ற உண்மையை சிங்கள மக்களும் மெல்ல மெல்ல புரியத் தொடங்கினர் இராணுவ தரப்பில் பெருமளவு உயிரிழப்பு ஏற்பட்டு வருவதை அத்துலத்முதலி எவ்வளவு காலத்திற்குதான் மூடிமறைக்க முடியும். பாரிய அளவில் பணத்தைக் கொட்டி வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு பயிற்சி அளித்து, நவீனரக ஆயுதங்களை தரித்து விட்டும் கூட சிறிலங்கா கூலிப் படைகளால் புலிகளை வென்றுவிட முடியாது என்பதை அனுபவ ரீதியாக அரசாங்கம் உணர்ந்துகொண்டது.

இரண்டாவதாக, இந்த யுத்தத்தால் சிங்கள அரசு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியது. தமிழருக்கு எதிராக ஏவி விடப்பட்ட இந்த அதர்ம யுத்தம் கோடிக்கணக்கில் தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை விழுங்கி, நாட்டை குட்டிச் சுவராக்கியது. யுத்த சூழ்நிலை காரணமாக வெளிநாட்டு அரசுகள் சிறிலங்காவில் முதலீடுகள் செய்யப்பயந்தனர். கடனுதவிகள் கொடுக்கத் தயங்கினர் உல்லாசப் பயணிகள் வருகையும் நின்றது. இவற்றின் விளைவாக நாட்டில்பண

[2-ம் பக்கம் பார்க்க]



அமிர்தலிங்கம்:-
தமிழ் மக்களை இனி ரஜீவ் தான் காப்பாற்ற வேண்டும்.
அசமான் சொல்கிருர்:
தளபதி போ (Boor) ராடிக் களைச்சுப் போனுர்போல இடக்கு.

யுத்தத்திற்கான தயாரிப்புகள்




## யுத்த நிறுத்தத்தை எதிர்த்து தமிழீழ மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்

தமிழ் பேசும் மக்கள் தமிழீழமெங்கும் . ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தொடர்ச்சியாக நடாத்தி வருகிருர்கள். யுத்த நிறுத்தத்தையும், பேச்சுவார்த்தையையும் எதிர்த்தே தமிழீழமெங்கும் சாத்வீகப் போராட்டம் நடைபெற்று வருகின்றது முதியோரும் பெண்களும் மாணவர்களும் பல ஆயிரக் கணக்கில் கலந்துகொள்ளும் இவ் அமைதியான ஊர்வலங்கள் கூட சிறிலங்கா அரசின் விமானப் படையினரால் சுற்றி வளைக்கப்படுகின்றன. தாழப்பறந்து எம்மக்களை விரட்டும் முயற்சியில் இறங்கின ஆனல் தமிழீழ போராட்டத்திற்காக எத்தனையோ உயிர்களையும் உடமைகளையும் பறிகொடுத்த எம்மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சவில்லை. மாருக ஊர்வலம் சுலோக அட்டைகளை இன்னும் உயர்த்தியபடி உணர்ச்சி மிக்கதாயும், ஆவேசம்மிக்கதாயும் நகர்ந்தது.

## யுத்த நிறுத்தத்தை மீறிவரும் சிறிலங்கா அரசபடைகள்

இந்திய அரசின் நல்லெண்ண முயற்சிகாரணமாக அதற்கு மதிப்பளித்து இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்து அந்த நிபந்தனைகளை இலங்கை அரசு ஏற்று அமுல்படுத்திஞல் மூன்று மாதகாலத்துக்கு யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்த நாம் சம்மதித்திருந்தோம். அத்துடன் இலங்கை அரசே முன்வந்து மூன்றுமாத காலத்துக்குள் தமிழர்களின் பிரச்சினைக்கான ஒரு தீர்வை முன்வைக்கவேண்டும். அந்தத் தீர்வு எமக்கு திருப்தியளிக்காதபட்சத்தில் யுத்தநிறுத்தத்தைக் கைவிட்டுத் தாக்குதலைத் தொடருவோம் என்று கூறியிருந்தோம். தமிழீழ விடுதலைப் போராளிகள் முன் அரச படைகளின் தோல்வியை நன்குணர்ந்த சிறிலங்கா அரசு போர் நிறுத்தத்தை வலிந்து ஏற்படுத்தியது ஆனுல் இன்று அவற்றை தொடர்ந்து மீறும் நடவடிக்கையில்சிறிலங்கா அரசின் காடை இராணுவம் செயற்பட்டு வருகின்றது

- 21 - 6 - 85ல் முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியான் என்ற இடத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைச்சேர்ந்த இரண்டு உறுப்பினர்கள் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது இராணுவத்தினரால் சுடப்பட்டு காயங்களுடன் தப்பிவிட்டனர்,
- 22 - 6 - 85ல் மன்னுர் மாவட்டத்திலுள்ள உயிலங்குளத்தில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி இளைஞர்களமீது இராணுவம் சுட்டத்தில் ஒருவர் பிடிபட்டார். ஏனையோர் தப்பிவிட்டனர்: பிடிபட்டவர் உடல் எரியூட்டப்பட்டதாக 28ம் தேதி தகவல் கிடைத்துள்ளது.
- திருகோணமலையில் தமிழர்வாழும் பகுதிகளில் வெடிச் சத்தங்கள் கேட்டவண்ணமே உள்ளன. அகதிகளாகச் சென்ற தமிழர்கள் தமது பகுதிகளுக்குத் திரும்பிவர முடியாது தடுக்கப்படுகின்றனர். திருகோணமலையெங்கும் தமிழர்களுக்கு எதிராக கிழக்குச் சிங்கங்கள் என்ற பெயரில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.
- திருகோணமலை தம்பகாமம் பகுதியில் தேடுதல் நடவடிக்கை என்றபெயரில் இராணுவத்தினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் தமிழ் வயோதிபர் ஒருவர் கொல்லப்பட்டார்.

## யுத்த நிறுத்தம் என்பது....

(1ம் பக்க தொடர்ச்சி)

வீக்கம், வாழ்க்கைச் செலவு உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற சமூக, பொருளாதார சீர்கேடுகள் தலைவிரித்தாடின.

மூன்றுவதாக, விடுதலைப் போராட்டத்தை நசுக்க கையாளப்பட்ட யுத்த தந்திரோபாயங்களிலும் சிங்கள அரசு தோல்விகண்டது. இராணுவப் பயங்கரவாதத்தை மக்கள் மீது ஏவிவிட்டு, மக்களைக்கண்டபடி கொன்று குவித்து, மக்களுக்ந தாங்கொணுத்துன்பங்களை இழைத்து, பொதுமக்களிடமிருந்து போராளிகளை அந்நியப்படுத்திவிட கையாளப்பட்ட சூழ்ச்சிகள் எதுவும் பலிக்கவில்லை. எத்தனையோ துன்பங்கள் மத்தியிலும் மக்கள் மனவுறுதி தளர்ந்து போகாது விடுதலைப் புலிகளுக்கு பேராதரவு கொடுத்தனர்.

இறுதியில், அரச பயங்கரவாதத்தின் எதிர்விளைவு சிங்கள மக்களையும் தீண்டத்தொடங்கியது. இதனல் சிங்கள பௌத்த சக்திகள் அரசாங்கம் மீது தமது ஆவேசத்தை திருப்பின எதிர்கட்சிகள் அரசாங்கத்தை ராஜீனமா செய்யுமாறு கோஷமிட்டன.

ஒட்டுமொத்தத்தில் ஜெயவர்த்தன அரசு ஆட்டம் காணத் தொடங்கியது. இந்த நெருக்கடியான சூழ்நிலைக்கு சிங்கள அரசு தள்ளப்பட்டதற்கு காரணம் தமிழீழப் போராளிகளின் தொடர்ச்சியான, உக்கிரமான போராட்டம் என்பதை யாரும் மறுக்க முடியாது. சிங்கள அரசும் இதை நன்கு உணர்ந்துகொண்டது. இதனல்தான் தமிழீழப் போராளிகளுடன் யுத்த நிறுத்த உடன்பாடு செய்யவேண்டிய நிர்ப்பந்தம் சிங்கள அரசுக்கு ஏற்பட்டது. இந்தியா மூலம்தான் இது சாத்தியமாகும் என்பதை நன்கு அறிந்த சிங்களத் தலைவர்கள் போர் நிறுத்த உடன்பாடு ஒன்றை செய்து தருமாறு இந்திய அரசின் காலடியில் விழுந்தனர். பயங்கரவாதிகள், அராஜகவாதிகள் தேசத்துரோகிகள் என்று எம்மை இழிமைப்படுத்திவந்த சிறிலங்கா இனவாத அரசு இறுதியில் எம்மைப் பலம் பொருந்திய அரசியல் இராணுவ சக்திகளாக அங்கீகரித்து எம்மோடு ஒரு உடன்பாடு செய்துகொள்ள முன்வந்தமை எமக்கு ஒரு அரசியல் வெற்றியாகும்.

தமிழீழ விடுதலைப் போராளிகள் மீது செல்வாக்கைப் பிரயோகித்து போர் நிறுத்த உடன்பாடு ஒன்று செய்யும் பட்சத்தில் நிரந்தரமாக அரசியல் தீர்வுகாண நடவடிக்கை எடுப்போமென சிறிலங்கா அரசு இந்தியாவிடம் மண்டியிட்டுக் கேட்டது. ஜூன் மாத ஆரம்பத்தில் டில்லியில் நடைபெற்ற உச்சி மாநாட்டின்போது இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து இந்திய அரசு எம்மை அணுகியது. முதலில் நாம்போர் நிறுத்தத்தை முற்றுக நிராகரித்தோம் சிங்களத் தலைவர்களை நம்பமுடியாது என்பதை சுட்டிக்காட்டி. பழைய வரலாற்றில் நிகழ்ந்த நம்பிக்கைத் துரோகங்களை உதாரணம்காட்டி, களைத்துப்போன இராணுவத்திற்கும், சரிந்துபோன பொருளாதாரத்திற்கும் புத்துயிரூட்ட சிறிலங்கா அரசு கால அவகாசம் கேட்கிறது. என்பதையும் இந்திய அரசுக்கு புரியவைத்தோம். எமது நிலைப்பாட்டை இந்திய அரசு புரிந்துகொண்ட போதும். தனது நல்லெண்ண சமரச முயற்சிக்கு ஒத்துழைக்குமாறு வேண்டியது.

போர் நிறுத்தம் சம்பந்தமாக நாம் தனித்த முடிவை எடுக்கவில்லை. எமது கூட்டணியிலுள்ள தமிழீழ விடுதலை இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சிகர அமைப்பு ஆகிய விடுதலை இயக்கங்களுடன் கலந்தாலோசித்து கூட்டாக முடிவை எடுத்தோம். போர் நிறுத்தத்தை கொள்கையளவில் ஏற்றுக்கொண்ட நாம், இலங்கை அரசுக்கு சில நிபந்தனைகளை விதித்தோம். இந்த நிபந்தனைகளை இலங்கை அரசு நிறைவேற்றும் பட்சத்தில் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு போர் நடவடிக்கைகளை நிறுத்திக்கொள்வதென நாம் கூட்டாக முடிவெடுத்தோம். நான்கு அமைப்புகளுமாக விதித்த நிபந்தனைகள் வருமாறு:

(1) எமது மக்களின் சமூக, பொருளாதார வாழ்வைப் பாதிக்கும் சகல தடைகளும் நீக்கப்பட்டு தமிழீழத்தில் சகஜநிலை உருவாக்கப்பட வேண்டும்.

(2) சிறிலங்கா இராணுவப்படைகள் முகாம்களுக்கு வாபஸ்பெறப்பட்டு சகல இராணுவ கெடுபிடிகளும் நிறுத்தப்படவேண்டும்.

(3) அவசரகால, ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டு மக்கள் சுதந்திரமாக நடமாட அனுமதிக்கப்பட வேண்டும்.

(4) கடற் கண்காணிப்பு வலயம் மற்றும் தடைப்பிரதேசங்கள் நீக்கப்பெற்றுமீனவமக்கள் கடற்தொழில் புரிய அனுமதிக்கப்படவேண்டும்.

(5) தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்புக் குடியேற்றத் திட்டங்கள் கைவிடப்படவேண்டும்.

(6) கைதுசெய்து, காவலில் வைக்கப்பட்டிருக்கும் அப்பாவி இளைஞர்கள் அனைவரும் விடுவிக்கப்படவேண்டும்.

இந்த நிபந்தனைகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் 12 வாரங்களுக்குள் நாம் யுத்தநிறுத்தம் மேற்கொள்வதென முடிவுசெய்திருக்கிறேம். இந்தப் 12 வாரங்களுக்குள் சிறீலங்கா அரசு நிரந்தரத் தீர்வுக்கான உருப்படியான திட்டம் ஒன்றை எமது பரிசீலனைக்கு முன்வைக்கவேண்டும் அரசியல் தீர்வுக்கான இத்திட்டம் எமக்கு திருப்தியளிக்காது போனல் நாம் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்ளப்போவதில்லை அத்துடன் போர்நிறுத்தத்தைக் கைவிட்டு போராட்டத்தில் குதித்துவிடுவோம். ஆகவே, இலங்கை அரசு எவ்விதமான சமரசத்திட்டத்தை முன்வைக்கிறது என்பதில்தான் எல்லாமே தங்கியிருக்கிறது.

இந்த தற்காலிக போர் நிறுத்த நடவடிக்கையின் பயனுக எமது பிரச்சினைக்கு ஒரு இறுதியான சமரஸத் தீர்வு ஏற்படும் என்பதில் எமக்குத் துளிகூட நம்பிக்கை இல்லை. இனவெறி கொண்ட சிறீலங்கா அரசுக்கு அப்படி மனமாற்றம் ஏற்பட அறிகுறி எதுவுமில்லை தமிழருக்கு நீதி வழங்க வேண்டும் என்ற தார்மீக சிந்தனைக்குப் பதிலாக தமிழர்களை மீண்டும் ஏமாற்றி ஆயுதப்புரட்சிப்போராளிகளை அடிபணியச் செய்யவேண்டும் என்பதே அவர்களது அந்தரங்கத் திட்டம். 35 வருட அரசியல் வரலாற்றில் மீண்டும் மீண்டும் ஏமாந்துபோன கசப்பான அரசியல் வரலாற்றுப் பாடங்களில் நாம் நிறையக் கற்றுத் தெளிந்திருக்கிறேம். ஆகவே பேச்சுக்கள் என்ற இந்த சூத்திரத்தாரப் பொறிக்கிடங்கில் நாம் சிக்குப்படப் போவதில்லை என்பது உறுதியானதும் திட்டவட்டமானதாகும்.

முதலாவதாக இந்திய அரசு எதிர்பார்ப்பதுபோல சமஸ்டி அமைப்பு ஒன்றை உருவாக்கி வட., கிழக்கு மாகாணங்களுக்கு பிரதேச சட்டசபை ஆட்சியை கொடுக்க சிறிலங்கா அரசு தயாராக இல்லை.

இரண்டாவதாக, அப்படியொரு பிரதேச சுயாட்சித் திட்டத்தை பௌத்த-சிங்கள இனவாத சக்திகள் எதிர்த்தே தீரும். சமஸ்டியாட்சி தனியரசுக்கு ஒத்தது என்பதே பெரும்பான்மைச் சிங்களவரது கருத்தாகும். வடக்கையும் கிழக்கையும் இணைத்த தமிழ்ப் பிரதேச ஐக்கிய அமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதை சிங்கள இனவெறியர்கள் விட்டுக்கொடுக்கப் போவதில்லை. ஆகவே மீண்டும் மாவட்ட சபையென்றும் அதிலிருந்து மாகாண சபை என்றும் புளித்துப்போன திட்டங்களே முன்வைக்கப்படும். இந்தக் குறைந்தபட்சத் திட்டங்கள் எதையும் நாம் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

எமது அரசியல் விடுதலைப் போராட்டத்தில் நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்திருக்கிறேம். தாங்கமுடியாத துன்ப, துயரங்களை அனுபவித்திருக்கிறேம். ஆயிரமாயிரம் அப்பாவி மக்களை உயிர்ப்பலி கொடுத்திருக்கிறேம். எமது வீடுகள், சொத்துக்கள் செல்வங்களை இழந்திருக்கிறேம். எண்ணற்ற இளம் போராளிகளை களத்தில் பலி கொடுத்திருக்கிறேம் பொறுத்துக்கொள்ள முடியாத அளவிற்கு நாம் அவமானப்படுத்தப்பட்டிருக்கிறேம். இழிமைப்படுத்தப்பட்டிருக்கிறேம் சிங்களப் பயங்கரவாதமானது. எமது தேசிய ஆன்மாவில் விழுத்திய வடுக்கள் என்றுமே மாறப்போவதில்லை.

இத்தனை கொடுமைகளுக்குப் பின்னர் இத்தனை உயிரழிவுகள், பொருளழிவுகளுக்குப்பின்னர், இத்தனை மகத்தான தியாகங்களுக்குப் பின்னர், இத்தனை வீர மகா சாதனைகளுக்குப் பின்னர், நாம் சிறிலங்கா அரசிடம் மண்டியிட்டு சலுகைகளுக்காக கை நீட்டப்போவதில்லை. நாம் ஆயுதங்களை கைவிட்டு மன்னிப்புக் கோரப் போவதில்லை எமது மக்களின் சுதந்திரத்தையும்,கௌரவத்தையும்நிலை நாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினேம் அந்த சுதந்திமும் கௌரவமும்' நிலைநாட்டப்படாதவரை நாம் ஆயுதங்களைக் கைவிடப்போவதில்லை.

நாம் சுதந்திரமாக. கௌரவமாக, நிம்மதியாக சமாதானமாக வாழ்வதாயின் அது சுதந்திரத் தமிழீழத்தில் தான் சாத்தியமாகும். அந்த சுதந்திரத் தமிழீழம் கிட்டும் வரை எமது போராட்டம் தொடரும் என்பது தெட்டத் தெளிவானது.

ஆகவே இந்த யுத்த நிறுத்தம் சமாதானப் பேச்சுக்கள் சமரசத் திட்டங்கள் என்ற மாயைகளில் மயங்கிவிடவேண்டாமென எம் மக்களை கேட்டுக்கொள்கிறேம். இந்திய அரசின்நல்லெண்ண முயற்சிகளுக்கு நாம் ஒத்துழைக்கும் அதேவேளை எமது இலட்சியத்திலிருந்து நாம் ஒருபோதும் வழிதவறப்போவதில்லை என்பதையும் நாம் திட்டவட்டமாக எடுத்துக்கூற விரும்புகிறேம். சிறிலங்காவின் ஆட்சியாளர்கள் தமிழரின் தேசியப் பிரச்சனைக்கு ஒரு நேர்மையான, நீதியான, கௌரவமான தீர்வை வழங்கப்போவதில்லை. என்பதை இந்திய அரசு உணர்ந்துகொள்ளும் போது எமது இலட்சியத்திற்கு மதிப்பளித்து, எமது மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கவேண்டும் என்பதே எமது அவா;

தர்மமும் உண்மையும் இறுதியில் வெற்றியளித்து, தமிழ்த் தாயில் கருக்கொண்டுள்ள வரலாற்றுக் குழந்தையான தமிழீழம் என்றே ஒரு நாள் பிரசவமெடுக்கும் என்பது எமது நம்பிக்கை.

எமது கையில் ஆயுதமும் ஆன்ம பலமும் இருக்கிறது. முழு மக்கள் பலமும் எமது கரங்களைப் பலப்படுத்துமானல் எமது இலட்சியம் வெற்றியடைவதை யாராலும், எந்த சக்தியாலும் தடுத்து நிறுத்த முடியாது.

## திரு ஆலாலசுந்தரத்தின் கஷ்ட நிலை

வீட்டுக்கு ஒரு பவுண் கேட்ட விடுதலைப்புலிகளிற்கு மக்கள் அமோக ஆதரவளித்தமை யாவரும் அறிந்ததே கடந்த காலங்களில் தமிழ் மக்களிற்காக உழைத்த கோப்பாய்த் தொகுதி தமிழ் மக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்திய திரு. ஆலாலசுந்தரம் அவர்களிடமும் பவுண் கேட்டுச் சென்றனர் விடுதலைப்புலிகள்.

வெளியில் வந்த திரு. ஆலாலசுந்தரம் தமது கஷ்டங்களை எடுத்துரைத்தார். தனது சீவியத்திற்காக வருமானமாக நம்பியிருந்த பாராளுமன்றப்பதவி பறிக்கப்பட்டதால் தாம் மிகவும் கஷ்டப்படுவதாகக் கூறினர். இந்த நேரத்தில் அவரது வீட்டினுள் வீடியோ படம் அவரது சொந்த டெக்கில் ஓடிக்கொண்டிருந்தது. மனைவி சுவாரசியமாக இரசித்துக் கொண்டிருந்தார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

தன்னிடம் பவுண் என்ற சாமானே கிடையாது என்றூர். தாம் சாப்பாட்டுக்கே கஷ்டப்படுவதாகக் கூறினர். கல்வியங்காட்டிலுள்ள அரிசிமில்லின் உரிமையாளர்கள் நால்வரில் திரு. ஆலாலசுந்தரமும் ஒருவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மில் அமைந்துள்ள நிலமும் இவருக்கே சொந்தமானது.

தமிழ்ப் பேசும் மக்களின் பாதுகாப்பிற்காக உங்களிடமுள்ள பெரும் தொகையான சொத்துகளில் ஒரு மிக மிகச் சிறு பெறுமதியான ஒரு பவுணுவது தருமாறு கேட்கப்பட்டது. கால் பவுண் கூட தராதநிலையில் விடுதலைப் புலிகள் திரும்பினர்.

## மினி திரை அரங்குகளுக்கு
### ஒரு வேண்டுகோள்

சீனவில் அடக்குமுறையாளருக்கெதிராக விடுதலைப் போராட்டங்கள் நடந்த வேளையில் பிரிட்டிஸார் அங்கு போதைவஸ்துகளைப் பெருமளவில் கொண்டு சென்று விநியோகித்தனர். இது எதைக் குறிக்கின்றது? போராட்டங்களைத் திசை திருப்பி மக்களை மயக்க நிலையில் வைத்திருக்க வேண்டுமாயின் போதைவஸ்துகள், பாலியல் வக்கிரங்களைச் சித்தரிக்கும் படங்கள் உளுத்துப்போன மேலைநாட்டுக் கலாசார சீரழிவுகள் போன்றவற்றில் மக்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதும் அவை இலகுவாகக் கிடைக்கக் கூடிய வழிவகைகளைச் செய்வதும் ஒரு கை தேர்ந்த யுக்தியாகும். இந்த அடிப்படையிலேயே மூலைக்கு மூலை மினி வீடியோ அரங்குகள் என்று கூறப்படும் திரை அரங்குகளில் காட்டப்படும் நீலத் திரைப்படங்களையும் நோக்க வேண்டியுள்ளது. இவ்வாறன பல திரையரங்குகளில் காண்பிக்கப்படும். நீலத் திரைப்படங்களைப் பற்றிய புகார்கள் மக்களிடமிருந்து பெருமளவில் எமக்கு கிடைத்த வருகின்றது.

பிரபல்யமான பாடசாலைகளைச் சூழவுள்ள பல திரையரங்குகளில் இவ்வாறன படங்கள் காண்பிக்கப்படுவதால் பாடசாலை மாணவர்களைச் சுண்டியிழுத்து அவர்களது கல்வியையும்பாதிக்கின்றது. பகல்நேரக் காட்சிகளும் காண்பிக்கப்படுவது மாணவர்கள் பாடசாலை நேரத்தில் படிப்பைக் கைவிட்டுச் செல்லுமளவிற்கு நிலைமையைக் கெடுத்துள்ளது.

மக்களிடையே இருக்கும் மாயையை நீக்கிஅவர்களுக்கு போராட்ட உணர்வை ஊட்ட வேண்டிய அவசியம் எமக்கு இன்று நிறையவுள்ளது. இந்த வேளையில் போராட்ட உணர்வை ஊட்ட முற்படாவிட்டாலும் பரவாயில்லை. எமது மக்களிடையே மயக்கத்தை ஊட்டும் இத் திரைப்படங்களை போடாது நிறுத்த வேண்டும். இவ்வாறன படங்கள் சமுதாயத்தில் பயங்கரமான சமூக, கலாச்சாரச் சீரழிவுகளை ஏற்படுத்தி விடும். விடுதலை ஆக்கபூர்வமான சமுதாயத்தை முன்னேற்றகரமான பாதையில் இட்டுச் செல்லக் கூடிய திரைப்படங்கள் திரையிடுமாறு சம்பந்தப்பட்டவர்களை மிக அன்பாக தமிழ் பேசும் மக்கள் சார்பில் கேட்டுக் கொள்கிறேம்.

## யுத்த நிறுத்தத்தை மீறி.....

(1ம் பக்க தொடர்ச்சி)

- மன்னர்ப் பகுதியில் கொககுடையார் என்ற இடத்தில் சில தினங்களுக்கு முன்னர் காட்டில் வைத்து 4 இளைஞர்கள் இராணுவத்தினரால் கொல்லப்பட்டனர்.
- எமது இயக்க உறுப்பினர்கள் இருவர் கிளிநொச்சி கந்தசாமி கோவிலின் முன்வைத்து கொமாண்டோ பொலிசாரினல் சுடப்பட்டனர். இருவரும் வாகனங்களை விட்டு விட்டுத் தப்பிவிட்டனர்.

7-7-85 அடம்பனில் பலஇளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்

9-7-85 முல்லைத்தீவில் நடைபெற்ற போர்நிறுத்த எதிர்ப்பு ஹர்த்தாலின்போது கடையடைப்பு செய்த கடைக்காரர்கள்மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

10-7-85 அக்கரைப்பற்று உப அரசாங்க அதிபர் அலுவலகம் படை முகமாக மாற்றப்பட்டுள்ளது.

அம்பாறை, அக்கரைப்பற்று பகுதிகளில் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு சோதனைக்குள்ளாக்கபட்டது.

12-7-85 வவுனியா, நெடுங்கேணி-பெரிய குளம் ஒதியமலை,ஒலுமடு பகுதிகளில் ஆயுதம் தாங்கிய அரச கூலிப்பட்டாளங்களின் அட்டகாசங்கள். பல வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. மக்கள் கிராமங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

- கடல் கண்காணிப்பு வலயத்திற்குட்பட்ட பகுதியில் மீனவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- புத்தளத்தில் லொறி ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

## தொடர்ந்துவரும் அடக்குமுறையின் கோரங்களையும் கொடுமைகளையும் நம் தமிழீழ மழலைகள் தொடர்ந்தும் அனுபவிக்காமலிருக்க

## நீ எம் மக்களுக்கு செய்த அழிவுவேலைகளும்நாசவேலைகளும் எம்மனதில் அழியாது உறைந்துபோய்க் கிடக்கின்றன



நிரந்தர விடிவிற்காய்



# நாம் போராடுகிறேம்

தமிழ் பேசும் மக்களின் கடந்த கால வரலாற்றில் காலம்காலமாக அனுபவித்து வந்த துன்பங்களும்துயரங்களும்கணக்கிலடங்காதவை பதவிக்குவந்த அத்தனை சிறிலங்கா அரசும் இனவாதத்தைக் கட்டி வளர்த்து அதனூடாகவே தமது பதவியைக் கட்டிக் காத்து வந்துள்ளன. இனவெறி பிடித்த சிறிலங்கா அரசு எம்மக்களுக்குச் செய்து வரும் கோரங்களும் கொடுமைகளும் முற்றுக முற்றுப்பெற நிரந்தர விடிவிற்காகவே நாம் போராடுகின்றேம்.



தொடரும் அடக்குமுறைகள்!
காலம் காலமாக...........
பேச்சுவார்த்தைகள்!
உடன்படிக்கைகள்!
எழுதிய மை காய முன்பே கிழித்தெறியப்பட்ட
—உடன்படிக்கைகள்!
தொடர்ந்து தொடரும் அட்க்கு முறைகள்!
இவற்றிற்குஎல்லாம்நிரந்தரவிடிவு-இறுதி லட்சியமடைய நாம் எம்மை தியாகவேள்வியில் அர்ப்பணித்துப் போராடி வருகின்றேம்.

## தொடர்ந்து வரும் அடக்குமுறையின் கோரங்கள் கொடுமைகள்

யூன் மாத முற்பகுதியில் திருகோணமலை மாவட்டத்திலுள்ள கல்லடி, வாழைத் தோட்டம், மல்லிகைத்தீவு, ஈச்சியம்பத்தை, வெருகல் முகத்துவாரம், சங்குவேலி, 3 ஆம் கொலனி, 58 மீன்காமம், பட்டித்திடல் மணல்சேனை, ஆலிம்சேனை, கிளிவெட்டி, கல்காமுனை என்பன உட்பட பல கிராமங்கள் அரசபயங்கரவாதிகளாகிய ஆயுதப் படை, ஊர்காவல் படைக் குண்டர்களால் தீவைத்துச் சூறையாடப்பட்டது. இவ் வெறியாட்டத்தின் போது கிளிவெட் டியிலிருந்து மாத்திரம் பெண்களுட்பட சுமார் 55 பேர் மிலேச்சத்தனமான இவ் அரசபயங்கரவாதிகளால் பிடித்துச் செல்லப்பட்டு கந்தளாய் பாலத்தில் இறக்கப் பட்டு கதறக் கதற சுட்டுக் கொல்லப்பட்டனர். அத்துடன் வேறு பல கிராமங்களிலும் தமிழ் மக்கள் கொன்றொழிககப்பட்டனர்.

இதை தொடர்ந்து தமது உயிருக்கும் பாதுகாப்பு வேண்டி உடைமைகளைக் கைவிட்டு குழந்தைகள், பெண்கள், வயோதிபர்களுட்பட பல தமிழர்கள் அகதி முகாம்களில் தஞ்சம் புகுதனர், இதைக்கூட சிங்களப் பேரினவாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை ஆலி ஒழுவ பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் தமது துணைக்கு ஊர்காவல் (!) படையைச் சேர்ந்தவர்களையும் ஏனைய சிங்களக் காடையர் கூட்டத்தைச் சேர்ந்தவர்களையும்கூட்டிக் கொண்டுதமிழ் அகதி முகாம்களுக்குச் சென்றனர்.

அங்கிருந்த தமிழர்களை வெருட்டி இம்சித்து விட்டு கதிகலங்கிப் போயிருந்த பெண்களில் 50 பேரைத் தெரிந்து தெஹிவத்தைக்குக் கொண்டு சென்றனர்.

இக் காமுகர்களின் வெறியாட்டத்தைக் கேள்விப்பட்ட விடுதலைப்புலிகள் அணியொன்று உடனடியாக எமது சகோதரிகளை மீட்க தெஹிவத்தைக்கு அனுப்பப்பட்டது எமது அணி அங்கு வருவதைக் கேள்விப்பட்ட பல சிங்களக் காடையர்கள் தப்பி ஓடிவிட்டனர். நாம் அங்கு சென்றடைந்தபோது அவர்கள் கொண்டு சென்ற தமிழ்ப் பெண்களில் இருவர் நிர்வாணமாக்கப்பட்டிருந்தனர் ஏனையோரையும் சுட்டுக்கொல்ல முயல்கையில் எமது அணி [redacted] தமிழ்ச் சகோதரிகளை மீட்டு, உடை கொடுத்து அழைத்து வந்தோம்.

இவ்வாறுன கீழ்த்தரமான வேலைகளைச் செய்வதற்கென்றே அரசபயங்கரவாதிலலித்திஞல் ஊர்காவல் (!) என்ற பெயரில் ஆயுதபாணிகளாக்கப்பட்டிருந்த அக் காடையர்களிடமிருந்த நான்கு 'சொட்கன்' (Shotgun) துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டன. எமது மீட்பு நடவடிக்கையின்போது ஒரு காடையன் 'சொட்கன்' சகிதம் உயிருடன் பிடிக்கப்பட்டான்.

இதற்கு மறுதினம் (12-6-85) தெஹிவத்தைகிராமத்தை நோக்கி வந்துகொண்டிருந்த இராணுவ கவச வாகனமென்று 9-10 மணிக்கு எம்மால் கண்ணி வெடிவைத்துத் தகர்க்கப்பட்டது. இராணுவத்தினரில் எண்மரும் ஒரு பொலிசாரும் இதில் இறந்தனர் பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

போராளிகளுடன் மோத அஞ்சும் இராணுவம் தனது வழமையான பொதுமக்களைத் தாக்கும் வேலையை மறுதினம் (13-6-85) தொடங்கினர். சம்பூர், சேனையூர், கட்டைபறிச்சான் போன்ற கிராமங்களில் முன்பு எரிக்காது மிஞ்சியிருந்த பகுதிகள் அரச பயங்கரவாதிகளால் எரிக்கப் பட்டது. இவ் எரிப்பு நடவடிக்கைகளுக்கு துப்பாக்கியில் ஒருவித பௌடர் நிரப்பப் பட்டு பாவிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக தரைமார்க்கமாகவும் கடல் மார்க்கமாகவும் கடனித்தீவு கிராமத்தை அழிக்க வந்தனர். அங்கு எமது மூர்க்கமான தாக்குதல்களுக்குத் தாக்குப் பிடிக்கமுடியாத அவர்கள் ஓட ஓட விரட்டியடிக்கப்பட்டனர். இவர்கள் பின்னர் சம்பூர் பகுதியிலுள்ள அகதிமுகாம்களுக்குச் சென்று அங்கு ஏதிலிகளாக வந்து சேர்ந்த தமிழ்மக்களுக்குக் கொடுப்பதற்கென வைத்திருந்த உணவுப் பொருட்களுக்கு நஞ்சு மருந்து அடித்து தமது ஆற்றுமையை அப்பாவி மக்களிடம் காட்டிவிட்டுச் சென்றனர். இப்பகுதியில் துரிதமாக வளர்ச்சியடைந்து வரும் விடுதலைப்புலிகளின் புரட்சிகர மக்கள் இராணுவம் சகல மக்களுக்கும் பாதுகாப்புக் கொடுக்கும் வகையில் தமது அணியைப் பலப்படுத்தி விரிவுபடுத்தி வருகின்றனர். மக்களின் மனப்பூர்வமான ஆதரவோடும் பங்களிப்போடும் வளர்ச்சியடைந்து வரும் நாம் எதிரியை தமிழீழத்தின் சகல பகுதிகளிலிருந்தும் விரட்டியடிக்கப்போவது நிச்சயம்.

## எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல

### எம் மக்கள் பாதுகாப்பாகவும் சுபீட்சமாகவும் சுதந்திரமாகவும் வாழ்வதற்கானதே

பத்து வருடங்களுக்கு மேலாக படிப்படியாக வளர்க்கப்பட்ட எமது போராட்டம் இன்று மக்கள் போராட்டமாக பரிணமித்து வருகின்றது. எமது போராட்ட வேகம் தியாகத்தின் முன் சிறிலங்கா அரசு "தாக்குதல்களை நிறுத்துங்கள்" என யுத்த நிறுத்தம் கோரி மண்டியிட்டு நிற்கின்றது. கடந்த இரு மாதங்களில் 3 பெரிய பொலிஸ் நிலையங்கள் முற்றுக தகர்க்கப்பட்டன. இராணுவம் வீதிகள் வலம் வர முடியாதவாறு கண்ணி வெடித்தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. முகாம்களிலே இராணுவம் முடங்கி கிடக்கின்றது.

நடைபெற்ற பொலிஸ் நிலைய தாக்குதல்களில் 3 சிங்கள பொலிசார் உயிருடன் சரணடைந்தனர். பலரை கைது செய்து ஆயுதங்களை பறித்து உடன் விடுதலை செய்தோம்.

சரணடைந்த 3 பொலிசாரையும் அன்பாக பராமரித்து அவர்களுக்கு எமது நிலைப்பாடு சம்பந்தமாக பூரண அரசியல் விளக்கமளித்து விடுதலை செய்தோம்.

சிறிலங்கா இனவெறி அரசும் அதன் ஊதுகுழல்களான தொலைக்காட்சி, பத்திரிகை, வானொலி சேவைகள் சிங்கள மக்களிடமிருந்து திட்டமிட்டு இவற்றை மறைத்து வருகின்றன. நாம் மனிதநேயத்துடனே போராடுகிறேம் என்பதை எம் மக்கள் நன்கறிவர். எம் மக்கள் மீதும் போராளிகள் மீதும் எம் எதிரியால் கட்டவிழ்த்து விடப்படும் கொடுரங்கள் எமது உணர்வுகளை கடுமையாக பாதிக்கின்றன. ஆயினும் உணர்ச்சிகளுக்கு அடிமையாகாது மனிதாபிமான உணர்வுகளை கைவிடாமல் எமது போராட்டத்தை நெறிப்படுத்தி முன்னெடுக்கிறேம்

நாம் யுத்தத்தை விரும்பி ஏற்றுக் கொண்டவர்களல்லர், இரத்தம் தோய்ந்த இம் மண்ணும் எம் மக்கள் மீது திணிக்கப்பட்ட கோரங்களும் கொடுமைகளுமே எம்மை போராட்டத்திற்குள் கொண்டு வந்தன. இவற்றிலிருந்து எம் மக்களை பாதுகாக்கவே நாம் ஆயுதம் ஏந்திஞேம். நாம் துப்பாக்கி ஏந்தியது யாரையும் அழிக்கவல்ல எம் மீது திணிக்கப்பட்ட அடக்கு முறையிலிருந்து எம் இனத்தை பாதுகாக்கவே!

"ஆயுதத்தை தன்வசப் படுத்தாமலும் அதைப் பயன்படுத்தப் பழகாமலும் இருப்பது, ஓர் அடக்கப்பட்ட இனத்தை அடிமை வாழ்வுவாழவே தகுதியாக்கும்"

- லெனின்

# ஸ்ரீலங்கா அரசின் கபட நாடகத்தில்....

தமிழ் பேசும் மக்களை இந்நாட்டின் ஒரு சாதாரண பிரஜைகளாகக் கூட மதிக்காத ஜயவர்த்தனா இங்கு இனப் பிரச்சினையே இல்லை என பாகிஸ்த்தானில் வைத்து உலகுக்கு அறிவித்திருந்தார். "தமிழ் பேசும் மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பது பற்றி நான் கவலைப்படப் போவதில்லை" என பகிரங்கமாகவே அறிவித்த ஜயவர்த்தனா திடீரென இப்போது யுத்த நிறுத்தம் தமிழ் பேசும் மக்களின் இனப் பிரச்சினையைத் தீர்த்தல், வடக்குக்கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்தி என்பன பற்றியெல்லாம் பேசும் போது இவற்றின் பின்னால் ஏதோ இருப்பது தெளிவாகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் கூட இனிமேல் பேச்சுவார்த்தைக்கு இடமில்லை என அறிவித்த ஜயவர்த்தனா இன்று தமிழீழ விடுதலைப் போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருக்கிறார் என்றால் அதன் பின்னணியை ஆராய்வது அவசியமாகும்

மிக உக்கிரமான நிலையை அடைந்துள்ள தமிழீழ விடுதலைப் போராட்டம் பல முனைகளிலும் சிறீலங்கா அரசிற்கு பெரும் நெருக்கடியைக் கொடுத்துள்ளது. இராணுவப் பொருளாதார உள்நாட்டு அரசியல் சர்வதேச நிலைமைகளில் மிகவும் இக்கட்டான கட்டத்தினுள் சிறீலங்கா அரசு சிக்கியுள்ளது,

தமிழீழத்திலும் தமிழீழத்திற்கு வெளியே சிறீலங்காவிலும் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரமான தாக்குதல்கள் அரசை ஆட்டங்காண வைத்துள்ளது. ஒரு மாதத்திற்கு ஒன்று என்ற ரீதியில் தமிழீழத்திலுள்ள பொலிஸ் நிலையங்களை விடுதலைப்புலிகள் கைப்பற்றி வந்தமை அரச படைகளின் இயலாமையை நன்றாகவே வெளிப்படுத்தியுள்ளது. பொலிஸ்நிலையம் தாக்கப் படப்போகிறது என்பதை அறிந்தவுடனேயே ஓட்டம் பிடித்த கொமாண்டோக்களின் வீரத்தை லலித் புரிந்து கொண்டுள்ளார் சித்திரை வைகாசி மாதங்களில் இராணுவ ரோந்துகள் மீது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேற முடியாத நிலைமையைத் தோற்றுவித்தது ஆரம்பகாலங்களில் போராளிகளுடன் நேர்நின்று மோதப் பயந்து தோற்றோடும் இராணுவத்தினர் பின்னர் பெரும் தொகையாக கவசவாகனங்களில்வந்து நிராயுதபாணிகளான பொதுமக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை மேற்கொண்டு வந்தனர். ஆனால் இன்று போராட்டம் வளர்ச்சியடைந்த நிலையில் தாக்குதல்களின் பின்னரும் போராளிகள் நவீன ஆயுதங்களுடன் அந்தந்தப் பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொண்டபோது இராணுவத்தினர் முகாம்களினுள்ளேயே ஒழிந்து கொண்டனர். அண்மையில் யாழ் பொலிஸ்நிலையம் தகர்க்கப்பட்ட மறுநாள் முழுவதும் யாழ்ப்பாண நகரம் விடுதலைப் புலிகளின் பூரணகட்டுப்பாட்டினுள் இருந்தது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தமிழீழப் போராளிகளிடம் படுதோல்வியடைந்த அரச படைகள் முகாம்களைவிட்டு வெளியேற மறுத்தனர். "தற்போது நாட்டில் வன்முறைகள் இடம்பெறாது அமைதி நிலவுவது ஆறுதலைத் தருகிறது. இவ் ஆறுதல் எமது படை வீரர்களின் நடவடிக்கைகளினால் அல்ல. பக்தர்களின் வேண்டுகோளின் விளைவாகவே ஏற்பட்டுள்ளது" என்ற பிரேமதாசாவின் கூற்று (வீரகேசரி 22-6-85) சிறிலங்கா இராணுவத்தின் உண்மைநிலையை தெளிவாகவே விளக்குகிறது. யுத்த நிறுத்தத்தின் பின்னர் இராணுவம் முகாம்களிற்கு அனுப்பப்படவில்லை. முகாம்களிலிருந்து வெளியில்வர இராணுவம் மறுத்தபின்னரே யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டது. சிறீலங்காவின் பொருளாதார நிலைமைகள் வரலாறுகாணாத நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. நாளொன்றிற்கு சிறீலங்காவின் யுத்தச்செலவு ஒருகோடி அறுபதுலட்சம் ரூபா ஆகும் 1985ம் ஆண்டிற்கான பட்ஜட் இல் 410 கோடி ரூபா பற்றுக்குறை இருந்தது இது வரையான செலவுகளினால் இன்னும் 400 கோடிரூபா மேலதிகப்பற்றுக்குறை ஏற்பட்டுள்ளது. மொத்தமாக இதுவரைக்கும் இவ்வாண்டிற்கான பட்ஜட் பற்றுக்குறையான 810 கோடி ரூபாவை நிவர்த்தி செய்யவழி இன்றி அரசு தவிக்கிறது. 1976ம் ஆண்டு பட்ஜட்டில் சிறிலங்காவின் பாதுகாப்பு செலவினம் 33 கோடி ரூபாவாக இருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும் சிறிலங்காவிற்கு அந்நிய செலாவணியைப் பெற்றுத்தரும் முக்கியதுறைகள் பெரும் வீழ்ச்சிகண்டுள்ளன அந்நிய செலாவணியில் 60% ஐப் பெற்றுத்தந்து முதலாமிடத்தை வகிக்கும் தேயிலையின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியினால் இது வரை 200 கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. மலையகத் தோட்டங்களில் அடிக்கடி நிகழும் வேலை நிறுத்தங்கள் தேயிலை உற்பத்தியை பெரிதும் பாதித்துள்ளது. சிறீலங்காவின் ஏனைய முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான றப்பர், தென்னை போன்றவற்றிற்கும் சர்வதேச சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

அந்நியச் செலவணியைப் பெற்றுக் கொடுப்பதில் முக்கியபங்கு வகிக்கும் இன்னோர் துறையான உல்லாசப் பயணத்துறை சீரழிந்து போயுள்ளது சிறீலங்காவிற்கு உல்லாசப் பயணிகள் பெருமளவில்வரும் காலமாகிய தை தொடக்கம் ஆனி மாதம்வரை 1984ம் ஆண்டில் 30% உம் 1985ம் ஆண்டில் மேலும் 20% ம் உல்லாசப்பயணிகளின் வருகை வீழ்ச்சியடைந்துள்ளது,

வெளிநாட்டு உதவிகளிலேயே பெரிதும் தங்கியுள்ள சிறீ லங்கா, அபிவிருத்தி நோக்கங்களிற்கென வெளிநாடுகளிலிருந்து பெற்ற உதவிகளை யுத்தத்திற்காக செலவிட்டுவந்துள்ளது. இதன்காரணமாக சிறீலங்காவிற்கு உதவிவழங்கும் நாடுகள் பல தமது உதவிகளை நிறுத்திக்கொண்டமை அல்லது கட்டுப்படுத்தியமை அரசிற்கு பெரும் பொருளாதார நெருக்கடியைக் கொடுத்துள்ளது.

சிறீலங்கா அரசு அரசியல் ரீதியிலும் பெரும் நெருக்கடியை எதிர்நோக்குகிறது நாட்டின் அபிவிருத்தி பாழடைந்து செல்வதையும் அப்பாவி உயிர்கள் வீணாகப் பலியிடப்படுவதையும் சிங்கள மக்கள் உணர ஆரம்பித்து விட்டனர். அரசாங்கத்தின் பொய்ப் பிரச்சாரங்களை விளங்கிக் கொண்டுள்ளனர். விழிப்படைந்த சிங்கள மக்களின் அரசிற்கு எதிராக எழுச்சியடைகின்றனர்.

சிறிலங்கா அரசியல் தலைவர்களைத் தீர்மானிப்பதில் முக்கிய பாத்திரம் வகிக்கும் பௌத்தபிக்குமார் ஆயிரக்கணக்கில் அரசிற்கெதிராக சத்தியாக்கிரகங்களும் உண்ணா விரதங்களும் இருந்து வருகின்றனர். அஸ்கிரியமகா நாயக்கதேரோ தனது தலைமையில் "பாதுகாப்புக்கவுன்சில்" ஒன்று அமைக்க பிரேரித்துள்ளார்.

முக்கிய எதிர்க்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி அரசினை பதவிவிலகும் படியும் பொதுத்தேர்தலை நடத்தும் படியும் நெருக்குகிறது.

சர்வதேச அரங்கில் சிறீலங்காவின் முகமூடி கிழிக்கப்பட்டு இனவாத சுயரூபம் வெளிக்காட்டப் பட்டுள்ளது. சர்வேதச சமூகத்தால் ஒதுக்கப்பட்ட உலகின் இரண்டு இனவெறி நாடுகளான இஸ்ரேலுடனும், தென்னாபிரிக்காவுடனும் ஏற்படுத்திக் கொண்ட தொடர்புகள் சிறீலங்காவின் சர்வதேச உறவுகளை பாதிப்படையயச் செய்துள்ளது முஸ்லீம்களின் பயங்கர எதிரியான இஸ்ரேலுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட தொடர்புகளினால் பெருமளவான இலங்கையரிற்கு வேலைவாய்ப்பை வழங்கும் அரபுநாடுகள் இலங்கையைக் கண்டித்துள்ளன.

சிறீலங்கா அரசு அமெரிக்கா, பாகிஸ்த்தான், சீனா என்பவற்றுடன் கொண்டுள்ள நெருக்கம் இந்தியாவிற்கு சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. தெற்காசியாவின் பிராந்திய வல்லரசாக இந்தியா திகழ்வதால் இந்தியாவை எதிர்த்துக்கொண்டு சிறீலங்கா நிலைத்திருக்க முடியாத நிலைமை நிலவுகிறது.

இவ்வாறாக தமிழீழ தேசியவிடுதலைப் போராட்டம் பலமுனைகளிலும் கொடுத்த நெருக்குதல்களே இன்றைய யுத்தநிறுத்த அறிவிப்பிற்கு காரணமாகும். இன்றைய இந்த நிலை எமது போராட்டத்தினது வளர்ச்சியின் ஒருகட்டத்தையே காட்டுகிறது. இது போராட்டத்தின் முடிவல்ல சிறிலங்கா அரசு எம்மீது பிரயோகித்து வரும் அடககுமுறையின் முடிவின் ஆரம்பமாகும்.

சிறிலங்கா அரசு தானாக தமிழ் பேசும் மக்களின் எந்தப் பிரச்சினைகளையும் தீர்க்கப் போவதில்லை. இத்தகைய நெருக்கடிகளினால் அரசு முன்வைக்கும் தீர்வுகள் எமது பிரச்சினைகளைத் தீர்க்கப் போவதில்லை.

எமது போராட்டம் ஒரு புனிதமான இலட்சியத்தை நோக்கமாகக் கொண்டது. இன்று நாம் கண்டுள்ள இந்த வேகமான வளர்ச்சி எம்மை மேன்மேலும் நம்பிக்கை கொள்ளச்செய்கிறது.

இடைக்காலத்திலேற்படுகின்ற சிறிய தளர்வுகளில் மயங்காது எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வோம். இறுதி இலட்சியத்தை அடையும் வரை எமது போரட்டம் தொடரட்டும்.



# மக்களோடு புலிகள்

பல்வேறு படிநிலைகளினூடு வளர்த்தெடுக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டம் இன்று மக்களின் பூரண பங்களிப்புடன் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

சிறிலங்கா அரசுக்கெதிரான வெற்றிகரமான தாக்குதல்கள் தமிழீழத்தின் எல்லைகளுக்கப்பால் - சிறிலங்கா வரை பரந்தும் இராணுவ முகாம்கள் வரை விஸ்தரிக்கப்பட்டுமுள்ளன. இந்தவகையில் தீவிரவளர்ச்சி கண்ட எமது போராட்டம் தடீரென வளர்ந்ததல்ல.

ஒரே ஒரு கைத்துப்பாக்கியுடன் 9 இளைஞர்கள் தொடங்கிய போராட்டமே இன்று மக்கள் போராட்டமாக பரிணமித்து வருகிறது. இது ஆரம்பத்தில் துரோகியை ஒழித்தல் ஒரு பொலிசை சுட்டு ஆயுதத்தைக் கைப்பற்றல் என்ற நிலையிலிருந்ததே வளர்ந்து வந்தது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களோடு பெற்ற அனுபவங்கள் வளர்ச்சிகள் ஒரு பொலிஸ் ஜீப்பை தாக்குமளவிற்கு வளர்ந்து அதிலிருந்து வளர்ச்சிக்கட்டமாக பொலிஸ் நிலைய தாக்குதல் நிலையை அடைந்தது.

இராணுவத்திற்கெதிரான தாக்குதல்கள் ஆரம்பத்தில் இரு ராணுவ வீரர் → இராணுவ வாகனம் → இராணுவத் தொடர் வண்டிகள் → இராணுவ முகாம் என்ற நிலையை படிப்படியான காலகட்டங்களினூடாக அடைந்து வந்துள்ளது படிப்படியான நிலைகளில் இயக்க வளர்ச்சிகள் ஆயுதக் கொள்வனவு, சர்வதேச உதவிகள் என்பவற்றை கெரில்லாப் போராட்டம் வளர்த்தே வந்திருக்கின்றது.




இன்று விடுதலைப் போராட்டம் ஓர் புதிய பரிமாணத்தை எடுத்து வருகின்றது. ஓர் தாக்குதலை தொடர்ந்து விடுதலைப் புலிகள் மக்களுடனேயே இருந்து பூரண பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு எம் மக்களையும், சொத்துக்களையும் இராணுவ வெறியாட்டத்திலிருந்து பெருமளவு பாதுகாத்து வருகின்றனர்.

மக்களும் விடுதலைப் புலிகளோடு ஐக்கியமாகி தம்மைத் தாமே பாதுகாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அனைவருமே இப் புரட்சிகர யுத்தத்தில் தம்மாலியன்ற முழுப் பங்களிப்பையும் செலுத்தி வருகின்றனர். தமிழீழ விடுதலைப் போராட்டம் உண்மையாகி தமிழீழம் மலர்ந்து கொண்டிருக்கிறது.



யாழ். பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்ட பின் யாழ்] [நகர பாதுகாப்பில் ஈடுபட்ட விடுதலைப்புலிகள்.

## தமிழீழ விடுதலைப் பாதையில்...

# விடுதலைப் புலிகளின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்கின்றன...

### குச்சவெளி பொலிஸ் நிலையத்தகர்ப்பும் கடற்படை முகாம் தாக்குதலும்



தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலைப் பிராந்திய தாக்குதற் பிரிவினர் வெற்றிகரமாக மேற்கொண்ட தாக்குதலினால் குச்சவெளிபொலிஸ் நிலையம் முற்றாகத் தகர்க்கப்பட்டது. இரவு 9 மணியளவில் ஐம்பதுபேர் கொண்ட விடுதலைப் புலிகளின் படைப் பிரிவு ஒன்று குச்சவெளிப் பொலிஸ் நிலையம் மீது அதிரடித் தாக்குதலைத் தொடுத்தது காவலுக்கு நின்ற கொமாண்டோக்கள் (இவர்கள் இஸ்ரேலிய மொசாட், பிரித்தானிய எஸ். ஏ. எஸ் போன்ற சர்வதேச நிபுணர்களினால் விசேடமாகப் பயிற்சியளிக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது) தாம் வைத்திருந்த துப்பாக்கி



களையும் போட்டுவிட்டு ஓடித் தப்பிவிட்டனர்.(அன்றுகாவல்! கடமையிலிருந்த பதின்மூன்று கொமாண்டோக்களிற்கு எதிராக அரச விசாரணை நடைபெறுகிறது.)

பல கொமாண்டோக்களும் பொலிசாரும் கொல்லப்பட்டனர்.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டு அரைமணி நேரத்தினுள் பொலிஸ் நிலையம் விடுதலைப் புலிகளின் பூரண கட்டுப்பாட்டினுள் கொண்டுவரப்பட்டது அங்கிருந்த சகல ஆயுதங்களும் பொருட்களும் கைப்பற்றப்பட்டன. பின்னர் பொலிஸ்நிலைய கட்டிடங்களான மூன்று பெரும் கட்டிடங்களும் வெடிகுண்டுகள் வைத்துத் தகர்க்கப்பட்டன. பொலிஸ் நிலைய வாகனங்கள் யாவும் சேதப்படுத்தப்பட்டன.

பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல் ஆரம்பமான அதே நேரத்தில் அருகிலுள்ள கடற்படை முகாமும் தாக்கப்பட்டது. மூன்றுமணி நேரமாக மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதலில் ரொக்கற்லோஞ்சர் போன்ற நவீன ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் பயன்படுத்தப்பட்டது. ஓர் கடற்படை உயர் அதிகாரி உட்பட பல கடற்படையினர் கொல்லப்பட்டனர். கடற்படை முகாம் கட்டிடங்களும் ரொக்கற் தாக்குதலினால் பெரும் சேதத்துக்குள்ளாகின.

தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் சார்பில் எந்தவித இழப்புகளுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக இருந்த திருகோணமலை, மூதூர் போன்ற பகுதிகளில் 1948ம் ஆண்டின் பின்பு சிறீலங்கா அரசாங்கங்களினால் திட்டமிட்டு சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப் பட்டன. இன்று அண்ணளவாக 50 % வரை சிறீலங்கா அரசினால் அத்துமீறிக்குடியேற்றப்படுபட்ட சிங்களவர்கள் திருகோணமலைப் பகுதியில் காணப்படுகின்றனர். கடந்த பொதுத் தேர்தலில் சிங்களவர்களிற்கென சேருவில எனும் ஓர் தேர்தற் தொகுதியும் திருகோணமலையிலிருந்து பிரிக்கப்பட்டது. மகாவலி ஆற்றுத் திட்டத்தையும் அங்கு நிறுவப்பட்ட பிரிமா மா ஆலை போன்ற தொழிற்சாலைகளையும் சாட்டாக வைத்து சிறீலங்கா அரசு மேலும் மேலும் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி வந்தது கடந்த காலங்களில் அம்பாறை, பதவியா, கந்தளாய் போன்ற பகுதிகளை சிங்களமயமாக்கியதுபோல திருகோணமலையையும அபகரிப்பதற்கு அரசு திட்டமிட்டிருந்தது.

தமிழீழத்தின் வடக்கு, தெற்குப் பகுதிகளிற்கு இடையில் இருக்கும் திருகோணமலையை முதலில் முற்றாக சிங்களமயமாக்குவதன் மூலம் தமிழ்பேசும் மக்களிற்கிடையேயான தொடர்புகளைத் துண்டிப்பது, பின்னர் சிங்களப் பிரதேசத்தில் சூழப்படும் தமிழீழத்தின் தெனபகுதியை படிப்படியாக சிங்களமயமாக்குவது என்ற அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் அனைவரையுமே அழித்துவிடுவதே அரசின் திட்டமாக இருந்தது.

தமிழ்பேசும் மக்களிற்கு பாரம்பரிய பிரதேசங்கள் என்று எதுவும் இல்லை என்ற 'ஜயவர்த்தனவின் நிலைப்பாடு சிங்கள மக்களுடன் கலந்து வாழும் பகுதிகளில் போராளிகளினால் தாக்குதல் எதையும் மேற்கொள்ள முடியவில்லை. என்ற லலித்தின் புரளி என்பவற்றிற்கு ஒரு பதிலடியாக குச்சவெளி பொலிஸ்நிலையம், கடற்படை முகாம் என்பன மீதான தாக்குதல்கள் அமைகின்றன.

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கான லலித்தின் திட்டமாகிய "வவுனியாவிலிருந்து ஆனையிறவுவரையும் இரண்டு லட்சம் சிங்களக் குடும்பங்களை குடியேற்றுதல்" என்பதை விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தவிடுபொடியாக்கியுள்ளன.



### குச்சவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

1) 7.62 Self Loading Rifle (nato) ... 10
2) 9.m.m Sterling Sub Machine gun U. K ... 05
3) 303 Mark - 4 Bolt action rifle U. K ... 24
4) Smith & Wession Pumping action repeater U.S.A ... 36
5) 12 Bore "Remington" Shot gun Germany ... 22
6) Revolver ... 03
7) Hand Grenade T. N. T ... 06
   J. R ... 21
8) Ammunitions (Rounds) ... 7022

*Other things:-*

1) Television ... 01
2) Video Deck ... 01
3) Radio ... 01
4) Helmet ... 05

### மூதூர் கண்ணிவெடித் தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

1) 303 Light Machine gun ... 01
2) 7.62 Self Loading Rifle ... 01
3) Chiness Type 56 (T. 56) ... 03
4) Ammunitions (Rounds) ... 103
5) Hand Grenade ... 06
6) L. M. G Extra Baral ... 01

## லலித்தின் புரளி

மன்னார் பகுதியிலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் தளம் ஒன்றைத் தாக்கி பெருந்தொகையான ஆயுதங்களையும் போராளிகளையும் கொன்றதாக அரச பயங்கரவாத அமைச்சர் தனது 'வழமையான புளுகுப் போட்டியில் இறங்கியிருந்தார். உண்மையில் மன்னாரில் நிகழ்ந்தது என்ன?

மன்னாரிலுள்ள விடுதலைப் புலிகளின் பல தளங்களில் ஒன்று தமிழ்த் துரோகி ஒருவனால் காட்டிக் கொடுக்கப்பட்டது. 15-6-85 அன்று பெருந்தொகையான இராணுவத்தினர் ஹெலிகப்டர்களில் புலிகளின் தளத்திற்கருகில் கொண்டுவந்து இறக்கப்பட்டு தளத்தை முற்றுகையிடுவதற்காக முன்னேறிக்கொண்டிருந்தனர். உடனடியாக தளத்திற்குத் தகவல் தரப்பட்டது.

போராளிகள் துரித கதியில் செயற்பட்டனர், தளத்தைச் சுற்றி எல்லாப்பக்கங்களும் காவல் போடப்பட்டது, தளத்திலிருந்த முக்கிய ஆவணங்கள், ஆயுதங்கள், ஏனைய பொருட்கள் யாவும் ஒரு வழியால் வெளியே கொண்டு செல்லப்பட்டன. விடுதலைப் புலிகளின் வீச்சான துப்பாக்கிப் பிரயோகமும் பயங்கர எறிகுண்டுத் தாக்குதல்களும் எதிரியை நெருங்க முடியாது தடுத்து வைத்திருந்தது. அனைத்துப் பொருட்களும் அப்புறப்படுத்தப்பட்ட பின்னர், சிக்கலான ஓரிடத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு 303 றைபில்களையும் சில "செல்" களையும் மட்டும் விட்டுவிட்டு போராளிகள் அனைவரும் பத்திரமாகதளத்திலிருந்து வெளியேறினர்.

எமது போராளிகளிற்கு சிறிய காயங்கள்கூட ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அரச பயங்கரவாதத்திற்கென மிகப் பெரும் தொகைப் பணத்தை செலவிட்டும். SAS மொசாட் போன்ற சர்வதேச பயங்கரவாத நிபுணர்களைக் கொண்டு கடும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டும் அரச பயங்கரவாதிகள் தமிழீழப் போராளிகளிடம் படுதோல்வியடைந்து வருவதை எப்படியாவது கண்ணுடிச் சீலையால் திரையிட்டு மறைத்துவிடத் துடிக்கும் லலித் அத்துலத் முதலி இத்தகைய போலிப் பிரச்சாரங்களில் ஈடுபட்டு வருகிறார்.

முதல் நாள் மறைந்த போராளிகளின் தொகை 18ஆகக் இருந்து அடுத்தநாள் 100 ஆக அதிகரித்தது அதற்கடுத்தநாள் மீண்டும் 18 ஆகக் குறைந்த வித்தையை லலித்தினால் அன்றி வேறெவராலும் சய்யமுடியாது.

# மொஸாட்டின் தந்திரத்தை முறியடிக்க ஒன்று திரள்க

**இந்து முஸ்லிம் கலவரம் சம்பந்தமாக உண்மை நிலைகுறித்தும் அதைக் கட்டுப்படுத்தவும் தமிழீழத்தின் தென் பகுதியில் (கிழக்கு மாகாணம்) விடுதலைப் புலிகளினால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரத் தின் சாராம்சம்**

வரலாறு தொட்டு இரண்டறக்கலந்து வாழ்ந்துவரும் தமிழ்பேசும் இனங்களின் பங்களிப் புடன் வெற்றி நடைபோட்டு வரும் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியி லும் முதிர்ச்சியிலும் அதிர்ச்சிகண்டு நிலைகுலைந்துபோன சிறிலங்காப் பேரினவாதிகள், சர்வ தேச பயங்கரவாதிகளும் என்றுமே இஸ்லாத்தின் பரமஎதிரியுமான ''மொஸாட்'' உதவி யுடன் முழு நாட்டையும் சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரிய தேசமாக மாற்ற புதியதொரு புத்தியைக் கையாண்டிருக்கின்றனர். தமிழ் முஸ்லிம் மக்களின் உடமைகளை சூறையாடியும் சேதம் விளைவித்தும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளால் எம்மிரு இனத் தவரின் பல்லாயிரக்கணக்கான உயிர்களைப் பறிகொடுத்தும் எமது பாரம்பரிய பிரதேசங் களில் சிங்களக் குடியேற்றத்தை ஏற்படுத்துவதன்மூலம் அம்பாறை, கந்தளாய், மூதூர் (சேருவில்) பகுதிகளில் எம்மிரு இனத்தவரையும் சிறுபான்மை இனமாக்கியதுடன் மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ''சிங்கபுரா'' என்ற புதியதொரு குடியேற்றத்தை நிறுவி யும் அம்பாறை மாவட்டத்தில் ''திகவாபி'' திட்டங்களினால் முஸ்லிம் மக்களின் காணி களைப் பறித்தெடுத்து எம்மை இன ரீதியாக அழித்துவரும் சிறிலங்கா அரசானது, எமது கையைக்கொண்டே எமது கண்ணில் குத்த முயலும் முயற்சியாக தமிழ் பேசும் மக்களி டையே குழப்பத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது.

இவர்களின் திட்டத்திற்கு ஒத்தாசை புரிவதுபோல் எமது போராட்டம் தனித்து தமிழ் மக்களுக்கானது என்பதுபோல் கருதக்கூடியதாகவும் முஸ்லிம் மக்களுக்கு எதிரானது போலவும் தோற்றமளிக்கக்கூடிய சில நடவடிக்கைகளை ஒரு சில இயக்கங்கள் மேற்கொண் டது வருந்தத்தக்கதாகும். எமது தேசிய விடுதலைப் போராட்டத்தை பின்னோக்கிச் செல் லக்கூடியதான முயற்சிகளை மேற்கொள்ளும் எல்லாச்சக்திகளையும் நாம் கண்டிக்கிறோம். மேலும் இந்நடவடிக்கைகள் நிறுத்தப்படாவிட்டால் இவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நேரிடும் எனவும் எச்சரிக்கிறோம்.

கிழக்குப்பகுதிகளில் நடைபெறுவது சில தீயசக்திகளின் செயற்பாடேயெனவும் தமிழ் முஸ்லிம் கலவரமல்ல என்பதையும் தமிழ்பேசும் மக்கள் நன்குணர்ந்துள்ளனர். காரைதீவு சம்பவத்தில் வெளியூர்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட காடையர்களும் பொலிஸ் கொமாண்டோக்களும் ஈடுபட்டதானது அரசின் கபடத்தனமான திட்டத்தைப் பகிரங்கப்படுத் துவதாக அமைந்துள்ளது. ஹெலிக்காப்டரிலிருந்து எறிகுண்டுகளை வீசயிருந்தமையும் காரை தீவைத்தாக்க மறுத்த நிந்தவூர், சம்மாந்துறை முஸ்லிம் மக்களை பொலிஸ் மொண்டோக் கள் தாக்கியதையும் தமிழ்பேசும் மக்கள் அறிவார்கள் மன்னாரில் நடந்த அசம்பாவிதம் வானொலியில் திரித்துக்கூறப்பட்டு இக்கலவரத்துக்குத் துபமிடப்பட்டது.

சிங்கள பௌத்தர் ஒருவரே இந்நாட்டின் சபாநாயகராகவும் எதிர்க்கட்சித்தலைவராகவும் இருக்கவேண்டுமென்ற மகா சங்கத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க சபாநாயகர் ஆசனத்தி லிருந்து தூக்கியெறியப்பட்டு ஜே. ஆரின் சட்டைப்பைக்குள் ராஜினமாக்கடிதத்தைக் கைய ளித்து விட்டிருக்கும் இலாகா இல்லாத அமைச்சரோ அல்லது ஏனைய தமிழ் முஸ்லிம் அமைச் சர்களோ நடைபெற்ற இத்துரதிட்ட சம்பவங்களை தடுத்து நிறுத்தமுடியாது இந்த மொஸாட் டின் ஆலோசனைக்கு முன்னால் வாயடைத்துப் போயிருந்த நிலைமையையும் இன்னும் இந்திய இணை அமைச்சர் ஆலம்கானின் கூற்றுக்கு எதிராக ஒரு சில முஸ்லிம் மக்களை தூண்டிவிட முயற்சியெடுத்து அம் முயற்சிகள் தோல்வியடைந்ததையும் தமிழ் பேசும் மக்கள் நன்குணர் வார்கள். துரதிஷ்டவசமாக முஸ்லிம் மக்களிடம் கொள்ளையடித்தும் கப்பம் வாங்கியும் வந்த இயக்கங்கள் (?) இப்போதாவது தமது தவறை உணர்ந்திருப்பார்கள் என நம்புகிறும்.

வாழைச்சேனை காகிதஆலை ஊழியர்களுக்கோ அல்லது வர்த்தக நடவடிக்கைகளுக்கும் தமது நாளாந்த அலுவல்களுக்கும் பழைய வாசஸ்தலங்களுக்கும் திரும்பும் முஸ்லிம் மக்களுக் கோ எவ்வித தீங்கும் ஏற்படுத்த வேண்டாமெனவும் இரு தரத்தினரையும் வேண்டிக்கொள் ளுகிறும். இதுவரை நடைபெற்ற சம்பவங்களைக் கிண்டிக் கிளறி சுமுக நிலை ஏற்படும் ஒரு நல்ல சந்தர்ப்பத்துக்குப் பங்கம் ஏற்படாமல் நடந்து கொள்ளும்படி இரு சமுகத்தவர்களையும் வேண்டிக்கொள்வதுடன் இனிமேலும் ஆட்கடத்தல் சம்பவங்கள் தொடர்ந்தால் சம்பந்தப்பட் டவர்கள் மீது கடுமையாக நடந்துகொள்ளநேரிடும் என்பதையும் அறியத்தருகிறேம். எம்மிரு இனத்தவர் இடையேயும் குரோத உணர்வை வளர்க்க முயலும் அறிக்கைகளையும் பிரசுரங் களையும் வெளியிடவேண்டாமெனவும் வேண்டிக்கொள்ளுகிறேம்.

**அரச அட்டுழியத்தின் நரித்தனமான திட்டத்தை முறியடிக்க ஒன்று திரள்க.**
**வளர்க தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமை.**
**வெல்க தமிழீழம்,**

# மக்களுக்கான கலை

கலை தெய்வீகமானது. புனிதமானது. அதில் சம்பிர தாயங்கள் மரபுகள் என்பன மாற்றப் படக் கூடாது; கலை கலைக்காகவே என்று கூறுவ தெல்லாம் விதண்டாவாதங் களாகும். கலையில் வளர்ச் சியையோ புதிய வெளிப்பாடு களையோ கொண்டு வரக் கூடாது என்று அடம் பிடிக் கும் பழமை வாதிகளின் கூக் குரல் தான் இந்தக் கலை கலைக் காகவே என்னும் வாதம் அப் படியாயின் கலை யாருக்காக என்ற கேள்வி எழும் ஆம் கலை மக்களுக்காக மக்களை அறி வூட்டும் ஒரு செய்தியை எடுத் துச் செல்வதாகவும் அவர் களது விடிவுக்கான வழியைக் காட்டுவதாகவும் கலை அமைய வேண்டும்.

அதாவது கற்பிக்கும் கலை என்று நாம் பேச்சு வழக்கில் பாவிக்கின்றேம். மாணவர் களுக்கு ஒரு விடயத்தை தெளி வாக எடுத்து விளக்குவதும் ஒரு கலை தான். போர்த் தந்தி ரோபாயங்களைக் கையாள்வ தும் ஒரு வகைக் கலைதான் எதிரி யார்? நண்பன் யார்? என்று விளக்கி மக்களைப் பாதுகாத்து மக்களுக்கான சரியான அரசியலை உருவாக்கு வதும் கலைதான், இவ்வாறே தெளிவான செய்தியை மக்க ளிடையே எடுத்துச்செல்லும் நாட்டியம், நாடகம், கவிதை, சினிமா என்பனவும் கலை வடி வங்களே.

இதைவிட்டு கலையில் மா ற்றம் எதையும் கொண்டு வரக் கூடாது, கலையைப் பிரச் சார சாதனமாக்கக் கூடாது என்று ஒரு சாராரும் கலை என் பது சும்மா பொழுது போக் குக்காக என்று ஒரு சாராரும் கூறி இவர்கள் உண்மையான கலையை வளர விடமாட்டார் கள். மக்களைத் திசை திருப்ப எத்தனிப்பார்கள்.

ஆளும் வர்க்கங்கள் தம் மைப் பாதுகாக்கும் கலையை யும் ஒடுக்கப்பட்ட மக்கள் அடக்குமுறைக் கெதிரான மீட்சியையும் நம்பிக்கையை யும் அளிக்கும் கலை வடிவத் தையும் தேர்ந்தெடுப்பது என் பது ஒரு தற்செயல் நிகழ்ச்சி யல்ல. இன்று நாம் பார்க்கும் பெரும்பாலான சினிமா,பத் திரிகைகள் என்பவை ஆளும் வர்க்கங்களைப் பிரதிநிதித்துவ ப்படுத்துவதாகவும் மக்களை உண்மையான உலகைப் பார் க்க விடாது ஒரு வித போதை மயக்கத்தில் வைத்திருப்பதா கவும் தான் இருக்கின்றது இதி லிருந்து நாம் விடுபட்டு சரி யான கலை வடிவத்தைத் தேர் ந்தெடுக்க வேண்டிய தேவை எமக்கு அதிகரித்து வருகின் றது.

அடக்கு முறைக்குள்ளாக்கப் பட்டு விடுதலைக்காக ஏங்கிக் கதறி நிற்கும் மக்களுக்கு ''குழ லூதி மனமெல்லாம் கொ ள்ளை கொண்டதின் பின்பு குறையேதும் நமக்கேதடி'' என்றும் ''தீராத விளையாட் டுப் பிள்ளை கண்ணன் தெருவி லே பெண்களுக் கோயாத தொல்லை'' என்றும் ''அலைபா யுதே கண்ணு என் மனம் அலை பாயுதே'' என்றும் திரும்பத் திரும்ப பாடி அபிநயம் பிடித் தால் அவர்கள் குறை தீருமா, விடுதலைக்கான மார்க்கந் தான் கிடைத்திருக்குமா? ஆனால் எத்தனையோ விதமான உணர்ச்சிகளையும் குறியீடு களையும் கொடுக்கக் கூடிய இதே பரத நாட்டியத்தைப் பயன்படுத்தியே மக்களை ஒடுக் கும் எதிரிகளையும் அவர்களின் சங்காரத்தையும் உணர்த்து கின்ற கலைப் படைப்புகளை வெளிக் கொண்டு வருவோம். எமது மக்களின் இயல்பான வெளிப் பாடுகளாகிய பண் டைய நாட்டார்பாடல் கூத்து என்பவற்றை செழுமைப் படு த்தி மக்களுக்கு எமது செய்தி களை எடுத்துச் செல்வோம்.

விரகதாபத்தில் வாடும் காதலி காதலனுக்கு காற்றேடு தூதுவிடும் செய்திகள் எமக்கு இன்று அவசியமில்லை. மாருக 'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி இருந்ததும் இந் நாடே'' என்றும் இங்கே ,ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம்'' என் றும் எனவே எமக்கு ''அச்ச மில்லை அச்சமில்லை உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதி லும் அச்சமில்லை அச்சமில்லை'' என்று கூறுகின்ற கலைகளை வளர்ப்போம்.

இங்கே ஆயிரம் எண்ணங் கள் மலரட்டும். அவை மக்க ளிடையே புரட்சிச் செய்தியை எடுத்துச் செல்லும்.கலைகளின் முக்கியத்துவம் இன்று சகல ராலும் உணரப்பட்டுள்ளது விடுதலைப் புலிகளின் கலாச்சா ரப்படை இன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. நாம் காத் திரமான படைப்புகளை உரு வாக்கும் நடவடிக்கைகளை எடு த்து வருகின்றேம். மக்களிடை யே இருந்து உருவாகும் கால த்தின் தேவையான கலை, இலக்கிய நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்ல நாம் தயாராகவுள்ளோம்.

# இலங்கையின் அமைச்சர் எம். எச் முகமது — உலக முஸ்லிம்களின் துரோகி!

தற்போது ஐரோப்பிய சுற்றுப்பயணம் மேற்கொண் டிருக்கும் இலங்கை போக்கு வரத்து அமைச்சர் எம். எச். முகம்மது இலங்கையில் மொசாட்டினது (இஸ்ரேலிய உளவுச் சேவை) கீழ்த்தரமான நடவடிக்கைகளுக்கு சர்வதேச இஸ்லாமியரின் ஆதரவைப் பெறுவதற்கு முயற்சி எடுத்து வருகிறர்!

ஐக்கிய ராச்சிய இஸ்லா மியப் புரட்சி இயக்கத்தினரா கிய - நாம் பிரச்சினைக்குரிய சிறிலங்காவில் மொசாட்டின் பங்கினையும் எம். எச். முகம துவின் காட்டிக்கொடுப்பு நட வடிக்கைகளை பற்றியதுமான சில உண்மைகள் இத்தால் வெளிச்சத்துக்கு கொண்டு வருகின்றேம்.

**உண்மை - 1**

திரு. எம். எச். முகம்மது கொழும்பு, கொள்ளுப்பிட்டி யில் அமைந்துள்ள ஐக்கிய அமெரிக்க தூதுவராலயத்தின் விசேட நலன் பிரிவுக் காரியா லயத்திற்கு அடிக்கடி விஜயம் செய்வது அவதானிக்கப்பட் டுள்ளது.

**உண்மை - 2**

1985-ம் ஆண்டு ஜனவரி 21-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 9.15இற்கும் பி. ப. 11.32 இற்குமிடையில் கொழும்பி லங்கா ஒபரோய் ஹோட்ட லில் திரு. ஆவ்ரஉஹாம் யோஃப் எனப்படும் விசேட மொசாட் ஏஜன்ட்டிற்கும் அமைச்சர் முகம்மட்டிற்கு மிடையில் ''இரண்டு மணித் தியால இரகசியப் பேச்சு வார்த்தை'' ஒன்று நடை பெற்றது என்பதற்கான தடிந்த ஆதாரங்கள் எம்மி டம் உண்டு!

**உண்மை 3**

முஸ்லிம்களை, கிறிஸ்தவர் கள் இந்துக்கள் ஆகியோரை உள்ளடக்கிய இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் மிக அமைதி யான வாழ்க்கைவாழ்ந்து வந்த சமயப் பேதமற்ற முற்போக் கான ஒரு சமூகம் ஆகும். அதே வேளையில் சிறிலங்கா அரசாங் கங்கள் பலதடவைகள் எமது பகுதிகளின் புனிதத் தன்மை யைக் கெடுத்தும் காலத்துக் குக் காலம் நூற்றுக்கணக் கான அப்பாவி முஸ்லிகளைக் சிங்களக் காடையர்களை பாது காப்பற்ற முஸ்லிம் மக்களுக் கெதிராக மோதவிட்டும் வந் துள்ளது! முஸ்லிம் விவசாயி களின் காணிகளைப் பறித்துக் கொண்ட சிறிலங்கா அரசாங்கம் அங்கு சிங்கள மக்களைக் குடியமர்த்தியும் பௌத்த கோவில்களை கட்டி யும் வந்துள்ளது. இப்போது தமிழ் பேசும் முஸ்லிம்களை ஏனைய தமிழ் மக்களுடன் மோதவிடுவதன் மூலம் ''மொசாட்'' இனுடைய கரங்களில் இப் பிற்போக்கு அரசாங்கம் நேரடியாக விழுந் துள்ளது!

**உண்மை - 4**

மொசாட் இயலுமான இடங்களில் எல்லாம் ''இஸ் லாமிய மக்களை பிரி, ஆளு, அழி'' எனும் தந்திரத்தைக் கடைப்பிடித்து வருகின்றது. என்பது இன்று வெளிப்படை உண்மையாகும்! இன்று சிறிலங்காவிலுள்ள முஸ்லிம் மக்களை அவர்கள் குறிவைத்துள்ளனர்.

சிறிலங்காவின் இஸ்லா மிய மக்கள் வளம் பொருந்திய சந்தோசமான அமைதி விரும் பும் சமூகத்தவர் என்பதை மீண்டும் ஒரு தடவை கூறிக் கொள்ளவேண்டும். மொசாட் டினுடைய வருகையும் அவர் கள் கையாளும் கீழ்த்தரமான தந்திரங்களும் காரணமாக சிறிலங்காவின் தற்போதைய பிரச்சினைகளில் அங்குள்ள முஸ்லிம்கள் பணயம் வைக் கப்பட்டுள்ளனர்! எம் எச், முகம்மதுவைப் போன்ற துரோகிகள் இஸ்ரேலிய மொசாட்டிற்காக செய்யும் கீழ்த்தரமான நடவடிக்கை களை உடனடியாக நிறுத்திக் கொள்ளாது விட்டால் சிறி லங்கா முஸ்லிம் மக்களுக்கு ஈடு செய்யமுடியாத இழப்பு கள் ஏற்படும்.

ஐக்கிய இராட்சிய இஸ்லாமிய புரட்சிகர இயக்கத்தினுல் வெளியிடப்பட்ட அறிக்கை: இது இஸ்லாமிய ஐக்கியத்திற்கும் புத்துயிர்புக்குமாக முஸ்லிம் நாடுகள் எங் கும் செயற்பட்டு வருகின்றது (பத்திரிகை வெளியீடு)

விமானப்படை தாக்குதலுக்கு தயாராகிவிட்ட விடுதலைப் புலிகள்

இந்த வகையில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் பலவிமானங்கள் சேதத்திற்குள்ளாயின.



அண்மையில் நாகர் கோவிலில் ஹெலிகப்டர் ஒன்று விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.





# விழிப்பாக இருங்கள்

போர் நிகழ்ந்துகொண்டிருக்கும் காலத்தைவிட போர் நிறுத்திவைக்கப்பட்டுள்ள காலத்திலேயே மக்கள் மிகவும் விழிப்பாக இருத்தல் அவசியமானதாகும். சிறிலங்கா அரசு திடீரென அறிவித்துள்ள போர்நிறுத்த வேண்டுகோளின்அடிப்படை உள்நோக்கம் என்பவற்றை அறிந்து கொண்டு சாதுரியமாக செயற்படுவது விடுதலைக்காகப் போராடும் மக்களின் முக்கியபொறுப்பாகும்

போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்ட பின்னரும் கூட சிறிலங்கா அரசின் பிரச்சார சாதனங்களான வானொலி, ரூபவாஹினி, பத்திரிகைகள் என்பன எமது விடுதலைப் போராட்டத்தையும்,மக்களையும்கொச்சைப் படுத்தும்விதத்தில் மேற்கொள்ளும் பிரச்சாரங்கள் எமக்கு எதைஉணர்த்துகின்றன?எமது போராட்டத்திற்கு ஈடுகொடுத்து நிலைகொள்ள முடியாத அரசு போராளிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு தவிர்க்க முடியாத வகையில் முன்வந்துள்ள போதும் எமது போராட்டத்தை இன்னும் விடுதலைப் போராட்டமாகஏற்றுக் கொள்ளாமை அரசின் உள் நோக்கத்தை தெளிவு படுத்துகிறது.

எமக்கெதிராக இழைக்கப்பட்டுவரும்கொடுமையான அநீதிகளை உடைத்தெறிவதற்கான எமது போராட்டத்தில் நாம் முன்னேறி வரும்போது எம் மீது பலவழிகளிலும் அடக்குமுறைகள் திணிக்கப்பட்டன. அதனையும் பொருட்படுத்தாது எமது மக்கள் புரிந்த தியாகம் மிக்க போராட்டத்தை எதிர்கொள்ளமுடியாது.அரசஇராணுவம் சிதறியோடிய போது எம்மை அடக்குவதற்கு சிறிலங்கா அரசு மேற்கொள்ளும் ஒரு சதி நடவடிக்கையே இன்றைய போர் நிறுத்த அறிவிப்பு என்பதைநாம்புரிந்து கொள்ள வேண்டும்.

இராணுவ நடமாட்டமும் தடை வலையச்சட்டமும் அகற்றப்பட்டவுடன் நாம் விடுதலையடைந்து விடுவோமா? எமது அடிப்படை உரிமைகள் எங்கே? அதற்காக நாம் ஏற்றுக் கொண்ட இழப்புகளையும்நாம் புரிந்த தியாகங்களையும் மறந்து விடலாமா?

தமிழ் பேசும் மக்களிற்கு பிரச்சனைகள் எதுவும் இல்லை பயங்கரவாதம்தான்அங் ள்ள ஒரே ஒரு பிரச்சனை என ர்வ தேச ரீதியில் போலிப் பிரச்சாரம் செய்வதற்கு வழிபார்த்து நிற்கும் சிறிலங்கா இனவாதத்திற்கு களம் அமைத்துக் கொடுப்பதற்கு எம்மவர்களையே நாம் அனுமதிக்கமுடியாது

போர் நிறுத்தத்தின் பின் தமிழ்ப் பிரதேசங்கள் சகஜ நிலையை அடைந்து விட்டன. மக்கள்சாதாரணமாக சந்தோஷமாக வாழ்க்கையை ஆரம்பித்து விட்டனர். இராணுவத்தினர் மக்களுடன் மிகவும் அன்பாகவும் நெருக்கமாகவும் பழகுகிறார்கள் என்றெல்லாம் பிரச்சாரம் செய்வதன் மூலம் எமது அடிப்படைப் பிரச்சினையை மறைப்பதற்குளம்மிற் சிலர் அரசிற்குஉதவியாக இருப்பதை தமிழ் பேசும் மக்கள் எவ்விதத்தில் அனுமதிப்பர்

எமது மக்கள் சித்திரவதைப்படுத்தப்பட்ட எமது பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்ட, எமது இளைஞர்கள் கொலை செய்யப்பட்ட மைதானத்தின் மேல்நின்று,எமது மக்கள் சிந்திய இரத்தம்காயமுன்பு எதிரியுடன் சினேக பூர்வ விளையாட்டுக்களில் ஈடுவடுவது எவ்விதத்தில் நியாயமாகும்.

இன்னும் அங்கேஅடைபட்டுத் தவிக்கும் அப்பாவி இளைஞர்களின் முனகல் ஒலி கேட்டுக்கொண்டிருக்கும் போதே வெளியில் மைதானத்தில்விளையாட்டு ஒலி எழுப்புவதுஎமது மக்களிற்குச் செய்யும் துரோகமும் அவமானமும். ஆகும்

சினேகபூர்வவிளையாட்டிற்குச் செல்வோரும் வாசலில் வைத்து பூரணமாக சோதனையிடப்பட்ட பின்னரே உள்ளே அனுமதிக்கப்பட்டனர். அந்தளவிற்கு எமது இனம் முழுவதையுமே கீழ்மைப்படுத்தி ஒரு சிலர்சிறு லாபங்களைச் சம்பாதிக்க எத்தனிப்பதை தமிழ்பேசும் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

சிறீலங்காஇராணுவம்சிறிதளவு கூட ஒழுங்குக் கட்டுப்பாடு அற்றது என்றும், அப்பாவித் தமிழ் மக்களிற்கெதிராக மனிதாபிமானமற்ற முறையில் கொடூரமான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என்றும் உலக நாடுகள் எல்லாமே அபிப்பிராயம் கொண்டுள்ளன. இந்த நிலையில் சிறீலங்கா அரசு இதற்கெதிராக சர்வதேசரீதியில் தீவிர பிரச்சாரம் செய்வதற்குஎமது மக்களிற்கும் இராணுவத்திற்குமிடையே நல்லுறவு உள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்கு உடந்தையாக நாமே செயற்படலாமா?

தமிழ் பேசும் மக்களுடன் ஒரு போலியான நல்லுறவை ஏற்படுத்த அரசபடைகள் முயற்சிக்கின்றன இதன்மூலம்எமது புனிதமான போராட்டத்தைச் சீரளித்து எம்மை அடிமை கொள்ள சிறீலங்கா அரசு ஆசைப்படுகிறது.

இந்நிலையில் நாம் மிகவும் விழிப்பாக இருத்தல் வேண்டும். எதிரி எம்மத்தியில் ஊடுருவுவதற்கு நாம் சிறிதுகூட இடமளித்தல் ஆகாது. எத்தனையோ தியாகங்களின் மேல் கட்டி வளர்க்கப்பட்ட இன்றைய புரட்சிகர நிலைமையை சிறிதளவாவது மழுங்கடிக்கும் செயல்களை நாம் அனுமதிக்கக் கூடாது.

தமிழ் பேசும் மக்களிற்கு எதிராகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மன்னிக்கப்பட முடியாதவர்களே. எம்மத்தியில் ஏற்றத்தாழ்வுகளில்லை. ஏழை-பணக்காரன், உயர்ந்தவன்-தாழ்ந்தவன், படித்தவன் -படிக்காதவன் என்று எவ்வித ஏற்றத்தாழ்வுகளும் இல்லாததே எமது இலட்சிய தமிழீழம்.

சமுகத்தில் தம்மை உயர்ந்த அந்தஸ்த்து உடையவர்கள் என தாமே பிரகடனம் செய்துகொண்டு தான்தோன்றித்தனமாக மேற்கொள்ளும் செயற்பாடுகள் முழுத்தமிழ் சமுதாயத்தையும் பாதிப்பதை அனுமதிக்க முடியாது.

சந்தர்ப்பவாதிகளையும், சமரசவாதிகளையும் நிராகரித்து ஒட்டுமொத்தமாக விடுதலைக்கான மக்கள் போராட்டத்தை முன்னெடுப்போம்.

## நாவாந்துறை மண்ணில் இடம்பெற்ற வேதனைமிக்க சம்பவம்

போராட்டம் படிப்படியாக வளர்ச்சிக் காலகட்டங்களினூடாக வளர்க்கப்பட்டு வருகின்றது. ஒரு கட்டத்தில் பொலிஸ் சேவைகள் முற்றாக நிர்முலமாக்கப்பட்டுசிவில் நிர்வாகம் குலைக்கடபடுகின்றது இதுசந்தர்ப்பத்தில்சமூகவிரோதிகள் இலகுவாக கிளர்ந்தெழுவர்சமூகவிரோதசெயல் களுக்கு அடிப்படைக் காரணம் பொருளாதாரக் காரணிதான் ஆனால் இவர்களின் செயற்பாடுகள் காடைத்தனம் மிக்கதாயும் தான் தோன்றித் தனமாயும் அமையும் போது நாம் அங்கு தலையிட வேண்டிய நியாயமான நிலைக்கு தள்ளப்படுகிறோம். எமது நோக்கு ''சமூகவிரோதிகள் அனைவரும் அழிக்கப்படுவதல்லசமூகவிரோத செயற்பாடுகள் அனைத்தும் நிறுத்தப்படவேண்டும் என்பதுவே.

இந்த வகையில்பொம்மை வெளியிற்கருகில் ஒதுக்குப் புறமாக இருக்கும் குடியேற்றத் திட்டமொன்றில் உள்ளபெண்கள் ஆண்கள் வேலைக்குப் போன சமயத்தில்தாம் தொடர்சியாக மானபங்கப்படுத்த படுவதாக தெரிவித்தனர். இதற்கு ஒரு பரிகாரம்காணும்படி கண்ணீரோடு முறையிட்டனர்.

அப்பகுதி மக்களின் துன்ப துயரங்களுக்கு பரிகாரம் காணும் வகையில் சம்பந்தப்பட்ட அந்த நபரைப்பிடிக்க விடுதலைப் புலிகள் காவலிருந்தனர்.

காவலிருந்த விடுதலைப் புலிகள் கையும் மெய்யுமாக சம்பந்தப்பட்டரை பிடித்து கற்பழிக்கப்பட்ட பெண்களிடம் ஊர்ஜிதம் செய்து மேல் விசாரணைக்காக கொண்டு வந்தனர்.

கொண்டுவரும்இடைவழியில்அந்நபரின்உறவ்னர்கள்எம் தோழர்களை தாக்கிஅச்சமூக விரோதியை தம்முடன் அழைத்துச்சென்றனர். இதையடுத்து அந்தப்பகுதிக்குபொறுப்பான எமதியக்க உறுப்பினர் ஒருவர் அச் சமூக விரோதியின் உறவினர்களிடம் சென்று நடந்த சம்பவத்தைப் பற்றி நீதி கேட்ட போது அவரைகண்டபடி பேசி அவரைத் தாக்க முற்பட்டனர்.

இதையடுத்து அடுத்த நாள் நாமனைவரும் இதைப் பற்றி விசாரிக்க சென்றோம். சம்பந்தப்பட்ட சமூக விரோதியை மக்கள் முன் விசாரித்து கற்பழிக்கப்பட்ட பல பெண்களின் முன்னிலையில் அவரை நன்கு ஊர்ஜிதம் செய்து மேல் விசாரணைக்காக கொண்டு வர முடிவு செய்தோம்.

அவரைமேல்விசாரணைக்காக வானில் ஏற்றிய போது ஒருஇயக்கத்திலஉள்ள அச்சமூக விரோதியின் புரிந்துணர்வற்ற தலையன் உறவினர்கள் வானின் குறுக்கே சைக்கிள்களைப் போட்டு வான் சாவியை பிடுங்கி அடாவடித்தனங்களில் இறங்கினர். இவர்களை எம்மால் வேறு வழிகளில் இலகுவாக சமாளித்திருக்க முடியுமெனினும் நாம் மிகப் பொறுமையை கடைப்பிடித்து எவ்வளவோ விளக்கங்கள் அளித்தோம் இவைகளைஅவர்கள் ஏற்காமல் தாம் ஸ்தாபன ரீதியாகவேசெயற்படுகிறோம்என்றுகூறி பல அடாவாடித் தனங்களில் இறங்கினர். அநாவசியமான சுடு பாடுகளைத் தவிர்க்க அச் சமூக விரேதியை அவ்விடத்திலேயே விட்டுத்திரும்பினோம்?

இன்னும் சம்பந்த பட்டவர்களில் 14வயது சிறுமி ஒருவர் அண்ணை நாங்கள் மானம் மரியாதையோட வாழ வழியில்லையா?எனக்கேட்டது.எம்காதுகளில் ஒலித்தவாறே உள்ளது. இதில் சம்பந்தப்பட்ட புரிந்துணர்வற்ற அவ் இயக்க உறுப்பினர்களுக்கு!

நாளை உங்களின் தங்கை அம்மா அக்கா ஓர் கட்டுக் கடங்கா சமூக விரோதியால் கற்பழிக்கப்பட்டால் கூட நீதி நியாயம் கேட்பது நாம்தான் உங்கள் தனிப்பட்ட உறவுகளுக்காக—அதுவும் ஓர் சமூக விரோதிக்காக துணை போகும் நீங்கள் விடுதலைப் போராளிகள் எனும் தகைமையை இழக்கிறீர்கள் பந்த பாசங்களுக்கு அப்பாற்பட்டதே நீதி நியாயம் உங்கள் இழி செயல்களால் ஸ்தாபனத்தின் பெயருக்கு இழுக்கு தேடாதீர்கள். இயக்கங்கள் மக்கள் மத்தியில் நேர்மையானதாகவும் ஒழுக்கமானதாயும் மதிக்கப்படுகின்றன.

எனவே பொறுப்பு வாய்ந்த ஸ்தாபனத்தின் உறுப்பினராக உங்களைக் கூறிக் கொள்ளுமுன் உங்களைமுற்றாகமாற்றி அமைத்துக் கொள்ளுங்கள்.

தமிழீழ போராட்ட வரலாற்றில் - உதிர்ந்த சில இளம் உயிர்கள்

இவ் இளசுகளின் தற்தியாகம் மிக்க உதிர்வுகள் உரமாகி போராட்டம் ஆயிரம் மடங்கு வளர்ந்து வலுப்பெற்றது!

# இன்று மக்களும் அணி வகுக்கின்றனர் தமிழீழம் உண்மையாகிவிட்டது




## அன்பு



தனபாலசிங்கம் (வெத்திலைக்கேணி)

''ஓ'' எம் தோழா உன் அன்பான நடத்தையால் உனக்கு அன்பாக நாமிட்ட பெயர் அன்பு. உன்னை இழந்தோம் எம் அன்பை இழந்தோம்.

அன்பு என்ற பெயரைக் கேட்டு சிலர் உன்னை சிறுவன் என்றோ, மிருதுவான தோற்றம் உடையவன் என்றோ நினைக்கலாம். 6 அடிக்கும் கூடிய உனது உயர்ந்த தோற்றத்தையும் தினவெடுத்த திரண்ட தோள்களையும் எம்மால் என்றும் மறக்கமுடியாது.

உன்னால் பயிற்றப்பட்ட எம் இளைஞர்கள் நீ இறந்த செய்தி கேட்டு உன்மீது கொண்ட அன்பால் அவர்கள் அடைந்த துயர் சொல்ல முடியாதது. உன் வீரம் செறிந்த தியாக வரலாறு ஒவ்வொரு மக்களும் அறிய வேண்டியது.

யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது குருநகர் இராணுவமுகாமில் இருந்து பொலிஸ் நிலையத்திற்கு உதவி கிடைக்காமல் தடைசெய்யும் பெரும்பணியை செவ்வனே செய்து முடித்தவன். பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கு முன்பாகவே குருநகர் முகாமுக்குமிக அண்மையில் சென்று கண்ணி வெடியை நிலைப்படுத்தவேண்டும்: இது சரிவர நடந்தேறினால் மட்டுமே பொலிஸ் நிலையத்தாக்குதல் நடைபெறமுடியும் இச்செயல் இடையில் குழம்புமானால் பொலிஸ் நிலையத் தாக்குதல் மட்டுமல்ல அதை நோக்கி அசைந்து கொண்டிருக்கும் எம் ஏனைய தோழர்கள் கூட உயிராபத்தை எதிர்நோக்கும் இக்கட்டான நிலைமை. இராணுவத்தினர் இரவு ரோந்துக்கு புறப்படும் முன் கண்ணிவெடியை நிலைப்படுத்தவும் வேண்டும் பொலிஸ் நிலையத்தாக்குதல் தொடங்கும்வரை அமைதியைப் பேண வேண்டிய பொறுப்பான வேலைக்காக ''வெடிமருந்து'' Explosiveல் தேர்ச்சிபெற்ற அன்பு நியமிக்கப்பட்டான்.

வெற்றிகரமாக கண்ணி வெடிகளை நிலைப்படுத்திய அன்பு G3 A3 என்ற தானியங்கி ரைபிளை தாங்கி பொலிஸ் நிலையத்தாக்குதல் தொடங்கியதும். முகாமை விட்டு புறப்பட்ட ராணுவத்தினர் மீது G3 A3 ஆல் சரமாரியாக ''இந்தா'' ''இந்தா'' என்று சுட்டு அவர்களை விரட்டிய அழகை இப்போதும் தோழர்கள் நினைவு கூர்ந்து கண்ணீர் சொரிகின்றனர்.

யாழ் பொலிஸ் நிலையத் தாக்குதல் தொடங்கி எமது தோழர்கள் அவ் இடத்தை விட்டு வெளியேறும்வரை மிகப்பலம் பொருந்திய குருநகர் முகாமில் இருந்து எந்த ஒரு கவசவாகனங்களோ, அல்லது ராணுவப்பிரிவையோ வெளியேறாமல் தடுத்து எம் வெற்றிக்கு உறுதி அளித்தவன் அன்பு.

எம்மோடு தங்கி இருக்கும்போது ஒரு நாள் அன்பு தன் சட்டைப்பையிலிருந்து ஒரு கடிதத்தை மெதுவாக வெளியே எடுத்தான் ஒரு நிழல்படம் கையிலிருந்து நழுவி கீழே நிலத்தில் விழுந்தது. அன்பு அதை எடுத்தான் அவன் நெஞ்சு படபடத்தது. படத்திலிருந்து அவனை நோக்கியது பழக்கமான, அழகிய அவனின் காதலியின் உருவம் சாறி அணிந்திருந்தாள் அது அவளுக்கு மிகவும் இசைந்திருந்தது. ஒடிசலான கொடி இடை உடைய அந்த அழகிய பெண்ணின் ஒளிவீசும் பெரிய வட்ட விழிகள் அன்பை ஊடுருவும் நோக்குடன் பார்த்துக் கொண்டிருந்தன.

அன்பு அந்த விழிகளை நெடுநேரம் நோக்கியவாறு இருந்தான் அவன் உள்ளம் இனந்தெரியாத இனிய சோகத்தால் நிறைந்தது விருப்பமான சோகப்பாட்டு ஒன்று மாலை வேளையில் தூரத்தில் இருந்து கேட்கும்போது உணர்வது போன்ற சோகம் அது. நிழற் படத்தின் மறுபக்கம் ''அன்பே மறந்துவிடாதே'' என்று எழுதப்பட்டு இருந்தது. அதனுடன் இருந்த கடிதத்தை மீண்டும் படித்தான் கணக்கிடமுடியாத தடவைகள் மீண்டும் மீண்டும் படித்ததால் கடிதம் கசங்கி மடிப்புக்களில் விடத்தொங்கி இருந்தது. நிழற் படத்தை மீண்டும் பார்த்தான்.

எதிா பார்த்துக் கொண்டிருக்கிறாயா? எதிர்பார் எதிர்பார்! காதலிக்கிறாயா? காதலி காதலி,! இனியவளே, தமிழீழம் கிடைக்கட்டும் நாம் இன்பமாக வாழலாம் என்று அவன் முணுமுணுத்தது எம் காதுகளுககு கேட்டதோ அல்லது நாம் உணர்ந்து கொண்டோமோ தெரியவில்லை.

நாம் தாக்குதல்களுக்குச் செல்லும் பொழுதெல்லாம் ''ரொக்கட் லோஞ்சரை'' அன்புதான் எடுப்பான் அதை தூக்கிச் செல்லும் உடல் வலுவும், சிறந்த பயிற்சியும் அன்பிடம் இருந்ததால் அவனை நாம் ''டேய்லோஞ்சர்'' என்று அன்பாக அழைத்தோம்.

அன்று காலை நாம் எல்லோருமாக காலை உணவருந்திக் கொண்டிருக்கின்றோம். வெளியில் இருந்து வந்த அன்பு தானும் எம்முடன் சாப்பிடுவதற்காக எம்முடன் பாயில் இருந்து சாப்பிடத்தொடங்குகின்றான் அவனுடைய பார்சலில் ஒரு வடை இருந்ததை கண்ட மற்றைய நண்பன் அதை பாய்ந்து எடுத்தான் அன்பான பறிபாடு, அன்பான ஒப்பந்தம். அன்பான பங்கிடல் மூலம் வடையை பங்கிட்டுக்கொண்டு மிக சந்தோசமாக, குதூகலமாக உணவருந்திக் கொண்டு இருந்தார்களா. கீழே பாயிலிருந்து சாப்பிடுவதால் தான் இடுப்பில் அணிந்திருந்த கைக்குண்டை அன்பு வெளியே எடுக்கும்போது கைக்குண்டின் தடை நீக்கப்பட்டு விட்டது அன்புவின் முகம் மாறுகின்றது. கைக்குண்டை உடனே வெளியே எறியவேண்டும் வெளியிலும் தோழர்கள் அமர்ந்திருந்தனர் உடனே தன்னுடைய வயிற்றோடு குண்டை அணைத்துக் கொண்டான் வெடியதிர்வுகளோ, அல்லது குண்டுச்சிதறல்களோ மற்றைய தோழர்களை பாதிக்கவிடாமல் அவை அனைத்தையும் தன் உடலால் ஏற்றுக் கொண்டான்.

''டமார்'' என்ற பெரிய சத்தம். புகைமண்டலம். நாம் தூக்கி வீசப்பட்டோம். புகை விலகியபோது ''ஓ கோரம்'' அறை எங்கும் இரத்த வெள்ளம். அறைகளில் எல்லாம் சதைத் துண்டங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கைக்குண்டால் துண்டாடப்பட்ட உடலின் பாகங்கள், மூன்று துண்டுகளாகப்பட்ட உடல்... எம்மை எல்லாம் காப்பதற்காக தன்னுடை உடலால் வெடிகுண்டைத் தாங்கிய அன்பு. துண்டுகளாகக் காணப்பட்டான்.

எம்மோடு பேசிக் கொண்டு இருந்தவன் சாப்பிட்டுக்கொண்டு இருந்தவன் திடீரென்று துண்டுகளாகக் கிடக்கும்போது எப்படித் தான் எம்மால் ஜீரணித்துக் கொள்ளமுடியும்.

உடலை அகற்றும் போது அன்புவின் டயறியின் பாகங்கள் இரத்தத்தில் தோய்ந்து காணப்பட்டது.

அதில் ஒருபக்கத்தில் ''மரணம் ஒருவனை அழிப்பதில்லை'' என்ற வசனம் காணப்பட்டது. ஆம் அன்புவின் மரணம், தியாகம் இன்னும் எத்தனையோ அன்புக்களை உருவாககியிருக்கின்றது

எமது வெளியீடான களத்தில் பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான உங்கள் ஆக்கங்களையும் எம் மக்கள் அனைவரிடமிருந்தும எதிர்பார்க்கிறோம், உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும் எமதுமுழு நேர ஊழியர்களிடம் கொடுக்கவும்